பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 10 புதன்கிழமை (22.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :87

## அரசுப் பிரதிநிதிக்குமுன் பாலசிங்கம் உரை

ஜெனீவா,பெப்.22

ஜெனீவாவில் இன்று ஆரம்பமாகும் சமாதானப் பேச்சுக்களின் ஆரம்ப நிகழ்வில் அரச பிரதிநிதிக்கு முன் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் உரையாற்றுவார்.

இன்றைய ஆரம்ப நிகழ்வில் முதலில் நோர்வே அனுசரணைக் குழுவின் தலைவரும் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் ஆரம்ப உரையை நிகழ்த்துவார்.

அதன்பின் அரச குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவா விடுதலைப் புலிகளின் குழுவின் தலைவர் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமா உரையாற்றுவது என்பது குறித்து இழுபறிநிலை ஏற்பட்டது.

இந்த இழுபறிநிலைக்குத் தீர்வுகாண்பதற்காக நோர்வேயின் முன்னாள் பிரதியமைச்சர் விதார் ஹெல்கிசன் இரு தரப்பினருடனும் மாறிமாறிப் பேச்சுக்களை நடத்தினார்.

இறுதியில் இருதரப்புகளுக்கும் இடையில் இணக்கநிலை ஒன்று ஏற்பட்டது.

அந்த இணக்கத்தின் அடிப்படையில் - அரச தரப்புக் குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா முதலில் பேச்சுக்கு அழைக்கப்படுவார். ஆனால், அவர் உரையாற்றாமல் பாலசிங்கத்தைப் பேசுமாறு கேட்டுக் கொள்வார்.

பாலசிங்கம் உரையாற்றிய பின்னர் நிமால் சிறிபால டி சில்வா உரையாற்றுவார்.

அதன்பின் பேச்சுக்கள் ஆரம்பமாகும். (உ-3)

# அரசு - புலிகள் குழுவினர் நேற்று நேரில் சந்தித்துப் பேசி அறிமுகம்

## இன்று நடக்கும் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் நோர்வே தயாரிப்பு

- ஜெனீவாவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஜெனீவா, பெப்ரவரி 22

போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்த பேச்சுகளுக்காக ஜெனீவா சென்றடைந்துள்ள இலங்கை அரச பிரதி நிதிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் நேற்று உத்தியோகப்பற்றற்ற ரீதியில் சந்தித்துப் பேசி அறிமுகமாகிக்கொண்டனர்.

இரு குழுவினரும் தங்கியுள்ள பொஸேயில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. சாதாரண அறிமுகச் சந்திப்பாகவே இது இருந்தது என்றும் முக்கிய விடயங்கள் எவையும் பேசப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. அதேநேரம் இன்றைய பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் சுவிஸ் நேரப்படி நேற்று நண்பகல் நோர்வேப் பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் பேச்சுக்குழுவின் தலைவர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், கேணல் ஜெயம், சமாதானச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டாவின் பாதுகாப்புக்கு மீண்டும் கொமாண்டோக்கள்

கொழும்பு, பெப்.22

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு மீண்டும் விசேட இராணுவக் கொமாண்டோ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் இது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தல்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்து சில இடங்களில் போட்டியிடத் தீர்மானித்ததையடுத்து விடுதலைப் புலிகள் உட்படப் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் இ.தொ.கா. தலைவருக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படலாமெனப் பாதுகாப்புத் துறையினர் சுட்டிக்காட்டியிருக்கின்றனர் எனவும் -

இதன் அடிப்படையிலேயே இ.தொ.கா. தலைவருக்கு விசேட இராணுவக் கொமாண்டோ

(14ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே.....

**கல்விச்சுடர்**

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி வெளியாகும் மாதிரி வினாத்தாள்கள் வரிசையில் இணைந்த கணிதம் வினாக்கள் இன்று பிரசுரமாகின்றன. நாளைய கல்விச்சுடரில் உயிரியல் பாடத்தின் மாதிரி வினாத்தாள் வெளியாகும்.

## பேச்சுக் குழுக்களின் சமத்துவம் இன்மை குறித்து நோர்வேத் தரப்பிடம் பாலசிங்கம் சுட்டிக்காட்டு

ஜெனீவா, பெப். 22

ஜெனீவாவில் இன்று ஆரம்பமாகும் சமாதானப்பேச்சுகளில் இரு தரப்பிலும் பங்குபற்றுவோர் எண்ணிக்கையில் சமநிலை பேணப்படவில்லை. இது குறித்து விடுதலைப் புலிகள் நோர்வே அனுசரணையாளர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் பேச்சுக் குழுவில் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தலைமையில் ஐந்துபேர் இடம்பெற்றுள்ளனர். அவர்களது செயலாளராக அடேல் பாலசிங்கம் செயற்படுவார். இவர்கள் தவிர புலிகளின் வளஆளணியினராக புலிகளின் சமாதானச்செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் உட்பட இருவர் இடம்பெற்றுள்ளனர்.

ஆனால், அரச பேச்சுக்குழுவில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் தலைவராக பிரிகேடியர் ஹென்ரிக்சன் நியமனம்

### சுவீடனைச் சேர்ந்த அவர் ஏப்ரலில் பதவியேற்பார்



ஒஸ் லோ,பெப்.22

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக சுவீடனைச் சேர்ந்த பிரிகேடியர் யு.எல்.எவ். ஹென்ரிக்சன் பதவியேற்கவிருக்கின்றார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இவர் தனது பதவியை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்பார்.

இலங்கை அரசுடனும் தமிழீழ விடுதலைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## களத்தில் சந்திப்போம்

### பாலா - சிறிபால டி சில்வா உரையாடல்

ஜெனீவா, பெப். 22

"நாளை களத்தில் சந்திப்போம்."

இவ்வாறு அரச சமாதான பேச்சுக்குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்குத் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சுக்குழுவின் தலைவரும் மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கம்.

" இல்லை! இல்லை! சமாதானப் பேச்சுக்களத்தில்

(14ஆம் பக்கம் பார்க்க)

# மஹிந்த - பிரபா சிந்தனைகள் இடையே ஜெனீவாவில் இன்று கருத்து மோதல்!



### சுவிஸ் வந்து சேர்ந்த பாலசிங்கம் பேச்சுப் பற்றி இவ்வாறு கருத்து

- ஜெனீவாவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஜெனீவா, பெப். 22

சுவிற்ஸர்லாந்து தலைநகர் ஜெனீவாவில் இன்று ஆரம்பமாகும் பேச்சு 'மஹிந்த சிந்தனை'க்கும் 'பிரபாகரன் சிந்தனை'க்கும் இடையிலான கருத்துப் போர். இந்தப் பேச்சில் யுத்தநிறுத்த உடன்பாட்டைச் செம்மையாக நடைமுறைப் படுத்துவது பற்றி மட்டுமே பேசப்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுத் தலைவரும் அந்த அமைப்பின் மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கம்.

இன்று ஆரம்பமாகும் பேச்சில் கலந்துகொள்வதற்கு வசதியாக பாலசிங்கம் தம்பதியர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு ஜெனீவா வந்து சேர்ந்தனர். அவர்களை சுவிஸ் வாழ் ஈழத் தமிழர்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# ஜெனீவா விமானநிலையத்தில் பாலசிங்கம் தம்பதிகள் வரவேற்கப்படும் காட்சிகள்


விமான நிலையத்தில் வரவேற்கும்போது....


பூச்செண்டுகள் வழங்கி வரவேற்கின்றனர்.




சுவிஸ் அதிகாரி வரவேற்கிறார்.


விமான நிலையத்தில் மக்கள் மத்தியில் உரையாற்றும்போது...


புலிகள் குழுவின் வாகன அணி.

# ஜெனீவாப் பேச்சுகள் வெற்றிபெறவேண்டி பாடசாலை, ஆலயங்களில் நேற்று பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,பெப்.22

ஜெனீவாப் பேச்சுகள் வெற்றிபெற வேண்டி குடாநாட்டுப் பாடசாலைகள், முக்கிய ஆலயங்கள், பொது இடங்கள் போன்றவற்றில் நேற்று சர்வமதப் பிரார்த்தனைகள், விசேட பிரார்த்தனைகள், சொற்பொழிவுகள், சமாதானப் பேரணிகள் என்பன சிறப்பாக நடைபெற்றன.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து சமாதானத்தின்மீது தமக்குள்ள பற்றுதலை வெளிக்காட்டினர்.

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் அனைத்திலும் நேற்றுக் காலை பிரார்த்தனையின்போது சமாதானத்தை வலியுறுத்தி சொற்பொழிவுகள், விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

நேற்று நண்பகல் 12 மணியளவில் சகல ஆலயங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் மணி ஒலிக்கப்பட்டு, மூன்று நிமிடங்கள் அனைவரும் எழுந்துநின்று மௌனப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழக மண்டபத்தில் விசேட சர்வமதப் பிரார்த்தனை இடம்பெற்றது.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம், யாழ். வணிகர் கழகத்துடன் இணைந்து இந்தச் சர்வமதப் பிரார்த்தனையை ஒழுங்குசெய்தது. யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதனின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முதலில் சமாதானத் தீப்பந்தம் ஏற்றப்பட்டதும் சமாதான ஒளியை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள், யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம், மௌலவி அலாவுதீன், வணிகர் கழக முன்னாள் தலைவர் இ.ஜெயசேகரம், அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியப் பிரதிநிதி பாஸ்கரன், சமூக சேவைகள் மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன்


சமாதான தீபம் ஏற்றப்படும்போது

ஆகியோர் உட்படப் பலரும் ஏற்றினர்.

நிகழ்வில் மங்கள விளக்கினை இந்துமத பீடாதிபதி என்.மகேஸ்வரக் குருக்கள், சைவக்குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த பரராஜசேகரக் குருக்கள், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் ஜெபநேசன், யாழ். மனிதநேய அமைப்புகளின் ஒன்றிய செயலாளர் கி.சிவசுப்பிரமணியம், மகளிர் அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி சறோஜா சிவச்சந்திரன், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், மாணவ, மாணவிகள் இருவர் உட்படப் பலரும் ஏற்றினர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது. தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர், யாழ். ஆயர், மௌலவி ஆகியோர் சமாதானத்தை வலியுறுத்தி உரையாற்றினர்.

அதன்பின்பு சர்வமதப் பிரார்த்தனைகள் இடம்பெற்றன. இந்துமத குருமார், கிறிஸ்தவமதப் பிரதிநிதிகள், இஸ்லாமிய மதத் தலைவர்கள் தனித்தனியாகப் பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர். பிரார்த்தனைகளில் அனைவரும் கலந்து வழிபாடு செய்தனர்.

தொடர்ந்து அனைவரும் 5 நிமிடநேரம் மௌனப்பிரார்த்தனையில் ஈடுபட்டனர். இறுதியில் யாழ். மனிதநேய அமைப்புகளின் ஒன்றிய செயலாளரின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

மாலை நிகழ்வுகளாக நல்லூர் ஆலய முன்றிலில், நல்லூர் ஆதீனம், யாழ். பேராலயம், யாழ். ஜும்மா பள்ளிவாசல் ஆகியவற்றில் விசேட வழிபாடுகள், பிரார்த்தனைகள் நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் இடம்பெற்றது. சகல இந்து ஆலயங்களிலும் பிரார்த்தனை நடத்தவேண்டுமென்று அவர் கோரிக்கை விடுத்தார். செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் விசேட உரை நிகழ்த்தினார்.

நேற்றுமாலை 4 மணியளவில் நாவாந்துறை நீக்கிலஸ் தேவாலயம், குருநகர் புனித யாகப்பர் தேவாலயம், யாழ். அடைக்கல மாதா தேவாலயம், சுண்டுக்குளி யுவானியார் தேவாலயம், பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயம், கொய்யாத்தோட்டம் கிறிஸ்துராஜா தேவாலயம், பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயம், கொழும்புத்துறை சூசையப்பர் ஆலயம் ஆகிய தேவாலயங்களில் இருந்து சமாதானப் பேரணி புறப்பட்டு யாழ். பேராலயத்தைச் சென்றடைந்தது.

அங்கு நேற்றுமாலை 5.15 மணியளவில் யாழ். பேராயரின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் மாணவர்கள் உட்பட அனைத்துப் பங்குமக்களும் கலந்துகொண்டனர்.

மாலை 6 மணியளவில் யாழ். குடாநாட்டில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக தீபங்களை ஏற்றி பிரார்த்தனை செய்தனர். இதேவேளை - இன்றும் நாளையும் சகல இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் ஆலயங்களிலும் விசேட பூசைகள் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து மக்களும் கலந்து சமாதானத்தைவேண்டி வழிபாடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(3-12-86)

## தாவடியில் மூவர் கைது

தாவடி,பெப்.22

தாவடிப் பகுதியில் திருட்டு முயற்சியில் ஈடுபட முயன்றதாகக் கூறப்படும் மூவர் விழிப்புக்குழுவினரிடம் சிக்கினர்.

நேற்று அதிகாலை தாவடி - மானிப்பாய் வீதியில் தாவடிப்பிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாக மறைந்திருந்த மூவர் மக்களால் பிடிக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவரிடம் துப்பாக்கி இருந்தது என்றும் - காலாசாரம் பேணும் குழுவினர் அவரை அழைத்துச் சென்றனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

மற்றைய இருவரும் மத்திய சன சமூக நிலையத்தில் பூட்டிவைக்கப்பட்டிருந்தனர். மக்கள் திரண்டுவந்து அவர்களைப் பார்த்தனர்.

பிரஸ்தாப நபர்களைக் கைதுசெய்யப் பொலீஸார் சம்பவ இடத்துக்கு வந்தபோது, மக்கள் அவர்களை ஒப்படைக்க மறுத்துவிட்டனர். பின்னர் இருவரும் கலாசாரம் பேணும் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.(3-149)

## மேசைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.22

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டு அவை நடத்தும் மாவட்ட மட்டப் போட்டிகளில் ஆண், பெண் இருபாலருக்குமான மேசைப்பந்தாட்டப் போட்டி இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. போட்டியில் கலந்துகொள்ளவுள்ள கழகங்கள் நேரகாலத்துடன் சமூகம் தந்து தங்களது வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு போட்டிக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (3-190)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.22

சென். ஜோன்ஸ் கல்லூரி ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.தனபாலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ். மின்சார நிலைய மின் அத்தியட்சகருமான என்.குகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (3-190)


சர்வமதப் பிரார்த்தனையில் இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மத வழிபாடுகள் இடம்பெறுவதையும் சமாதானத்தை வலியுறுத்தி நடந்த பேரணியையும் படங்களில் காணலாம். (படங்கள்: பகீரதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தீர்வு இன்றேல் தீர்க்கமான நகர்வு

ஐந்து தசாப்த காலம் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் முயற்சி களில் இன்றைய தினம் முக்கிய நாளாகும்.

இனப்பிரச்சினை பெரும் ஆயுதப் போராக வெடித்து வன்முறைகள் மூண்ட பின்னர், நீண்ட காலம் நின்று, நிலைத்துத் தாக்குப் பிடித்த யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகி இன்றுடன் நான்கு ஆண்டுகள் கடக்கின்றன.

எப்போது குழம்பி, செயலிழந்து, அடிபட்டுப் போகும் என்ற நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்ற அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தூக்கிப் பிடித்து, நிலைநிறுத்தி, தாங்கப் பண்ணுவதற்கு செய்யவேண்டியவை குறித்து ஆராய்வதற்காக தென்னிலங்கைச் சிங்கள அரசின் தலைமையும், வடக்கு-கிழக்குத் தமிழரின் தலைமையும் ஒரு மேசையில் அமர்ந்து மூன்றாந்தரப்பு அனுசரணையுடன் பேசுவதும் இந்தத் தினத்தில்தான் நடக்கப் போகின்றது.

அமைதி வழியில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணுதல் என்ற தற்போதைய சமாதான முயற்சிகள் சரியாக நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், மூன்றாவது நடுநிலைநாடு ஒன்றின் அனுசரணைப் பங்களிப்போடு - யுத்த நிறுத்தத்துக்கு வழி செய்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல் என்ற முக்கிய நிகழ்வோடு - ஆரம்பமானது.

உலகின் பல்வேறு தலைநகரங்களில் நடைபெற்ற சந்திப்புகள், பேச்சுகள், கலந்துரையாடல்கள் என்று ஒரு சுற்றுச் சுற்றி விட்டு அது இப்போது மீண்டும் ஆரம்பநிலைமை குறித் துப் பேசுவதற்கு ஜெனீவாவில் வந்து நிற்கின்றது.

மீண்டும் தொடக்கப் புள்ளியில் அமைதி முயற்சிகள். ஆனால், இப்போது தீர்க்கமான ஒரு நிலைமை எட்டப்பட்டு விட்டது. ஆக்கபூர்வமான திசையில் அமைதி முயற்சிகள் நகருமா அல்லது இத்தோடு அந்தப் பாதை மூடப்பட்டு விடுமா என்பதை உறுதியாகத் தீர்மானிக்கும் நிலைமை வந்துவிட்டது. இனிமேலும் இந்த முயற்சிகள் பலனின்றி - பயனின்றி - இழுபடும் என்ற ஐயுறு நிலைமை இல்லை.

ஒன்றில் அமைதி முயற்சிகளில் முன்நகர்வு. இல்லையேல், கடந்த ஆண்டு இறுதியில் தமது மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன் சூசகமாகச் சுட்டிக்காட்டியமை போன்று இது போராண்டாக வெடிப்பு.

இந்த இரண்டில் ஒன்றைத் தீர்மானிப்பதற்கான பேச்சு இன்று ஜெனீவாவில் இடம்பெறப் போகின்றது.

அமைதித் தீர்வுக்கான இந்த நான்கு ஆண்டு கால வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - தென்னிலங்கை அரசும் சிங்களத் தலைமையும் எவ்வாறெல்லாம் தவறாகக் கையாண்டு போட்டுடைத்தன என்பதைப் பார்த்தால் அவற்றின் அபத்தப் போக்குத் தெளிவாகும்.

வெறும் நாடாளுமன்றப் பெரும்பான்மையை வைத்துக் கொண்டு அரசியல் பலமற்று, அதிகார வறுமைக்குள் சிக்கித் தவித்த ரணிலின் அரசு, இந்த சமாதான முயற்சிகளை ஆரம்பித்தது. அதனைப் பயனுள்ள திசையில் முன்நகர்த்துவதற்கான முடிவுகளை எடுப்பதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் திராணியோ, வலுவோ அற்றிருந்த ரணிலின் அரசு அவற்றைச் செய்ய இயலாத காரணத்தால், மறுபுறத்தில் சர்வதேச சக்திகளைத் திரட்டி தமிழரின் ஆயுதப் போராட்ட சக்தியான விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒரு வலுவான சர்வதேச வலைப் பின்னலைப் பின்னியது.

ஆனால், ராஜதந்திரம் மிக்க தனது நுட்பமான தந்திரோபாய நடவடிக்கைகள் மூலம் அந்த வலைப்பின்னலில் சிக்காமல் தவிர்த்துக் கொண்ட தமிழர் தரப்பு, அந்த வலைப் பின்னலைப் பின்னிய தென்னிலங்கைத் தலைமையைக் கொண்டே அதனை அறுத்தெறிய வைக்கும் காய் நகர்த்தலை கனகச்சிதமாக நிறைவேற்றச் செய்து விட்டுப் பார்த்து நிற்கின்றது.

தனது இராணுவ, அரசியல் வலிமையை உரிய சமயத்தில், சரியான முறையில் பயன்படுத்திய புலிகள் அந்தத் தந்திரத்தின் மூலம் - பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் வடிவமாக எழுச்சி பெற்றிருந்த மஹிந்த ராஜபக்ஷவை - ஆட்சிக் கட்டில் ஏற வழிவகுத்தனர். அதன் வாயிலாக அதுவரை ரணிலின் அரசு பின்னி வைத்திருந்த சர்வதேச வலைப் பின்னல் அறுந்து, சுந்தலாகி, நூல்நூலாகி - நார் நாராகி - பிய்ந்து போனது.

நீதியான தீர்வைக் கோரி நிற்கும் தமிழினத்துக்கு அதன் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்கின்ற முடிவொன்றை சிங்களத் தலைமை தரவேண்டும். அதை விடுத்து தமிழரின் அரசியல், இராணுவப் பலத்தை அடக்கி, ஒடுக்குவதன் மூலம் உரிமைக்கான அவர்களின் போராட்டத்தை அடக்கிவிட முடியும் எனத் தென்னிலங்கை கனவு கண்டால் அது பலிக்கப் போவதில்லை.

இந்த நான்கு ஆண்டு கால யுத்த ஓய்வுவேளை அதையே தெளிவாக வெளிப்படுத்தி - உணர்த்தி - நிற்கின்றது.

அமைதி முயற்சிகள் ஊடாக நியாயத் தீர்வு ஒன்றைத் தமிழர்களுக்கு வழங்கும் விடயத்தில் இதய சுத்தியோடும், நேர்மையோடும் ஈடுபடுவதை விடுத்து -

ஒட்டுப் படைகளைப் புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு முரணாகப் போஷித்து, வளர்த்து, ஊக்குவித்து, வழிநடத்தி புலிகளுக்கு எதிராக ஏவிவிடும் தனது நரித் தந்திரத்தையோ அல்லது சர்வதேச வலைப் பின்னல் என்ற பூச்சாண்டியைத் தமிழர் தரப்புக்கு எதிராகக் கட்டியெழுப்பும் முயற்சிகளையோ சிங்கள அரசு தொடருமானால் -

யுத்தநிறுத்த ஒப்பந்தம் முறிவதும் சுயாட்சிக்கான தமிழரின் விடுதலைப் போர் மீண்டும் வீறுகொண்டு வெடிப்பதும் தவிர்க்கமுடியாதவையாகி விடும்.

இதை இன்று ஜெனீவாப் பேச்சு மேசையில் புலிகளின் தலைமைப் பிரதிநிதியான மதியுரைஞர் பாலசிங்கத்தின் ஆரம்ப - அறிமுக - உரை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குத் தெளிவாக உணர்த்தும் என எதிர்பார்க்கலாம்.

பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதியில்

# பாதிக்கப்பட்டோருக்கு வீடமைப்பதற்கு திட்டமிடப்பட்ட இடத்தில் படைமுகாம்!

யாழ்ப்பாணம்,பெப்.22

வடமராட்சி கிழக்கில் பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதியில் பாதுகாப்புப் படையினரின் பாரிய முகாம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

குடத்தனை மேற்கு, வலிக்கம்தோட்டம் என அழைக்கப்படும் பாரிய மணல் பிரதேசத்தில் இம்முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் பழுதடைந்த நிலையில் இருக்கும் பாரிய கட்டடத் தொகுதியிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் படையினர் பரவலாக முகாமிட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா மெதடிஸ்த திருச்சபையும் டயகோனிக் (Dia Konic) அவசர உதவிப் பிரிவும் இணைந்து ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வீடமைத்துக் கொடுக்கத் திட்டத்தை அமைக்க திட்டமிட்டிருந்த பிரதேசத்திலேயே படையினரின் புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்புப் பணிகள் நிறுத்தப்படக்கூடிய சூழ்நிலை தோன்றியிருப்பதாகக் கூறப்படுகிறது. (த-122)

# அதிபர்களுக்கான சம்பள நிலுவை; சில கல்வி வலயங்கள் அசமந்தம்!

அச்சுவேலி,பெப்.22

அதிபர்களுக்கான சம்பள நிலுவையை வழங்குவதில் வலயத்திற்கு வலயம் மாறுபட்ட முறையில் செயற்படுவதாக அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலை அதிபர்களுக்கு 1994.10.06 தொடக்கம் 1996.12.31 வரையான காலப்பகுதிக்கு வழங்க வேண்டிய சம்பள நிலுவை தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமைய சில கல்வி வலயங்கள் கடந்த வருடம் சம்பளப் பாக்கியை வழங்கியுள்ளன.

வலயக் கல்வி அலுவலகங்கள் தமக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பான உத்தேச மதிப்பீட்டை உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்து அதற்கான நிதியைப் பெற்றுக்கொள்ளத் தவறியமையினால்தான் இந்தச் சம்பள நிலுவையை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகக் கூறப்பட்டது.

இதுகுறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலர் சி. சரவணபவானந்தன் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கடிதமூலம் அறிவித்துள்ளார்.

அநுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு, கல்வி வலயங்களினால் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்கான அதிகரிக்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவு நிலுவைகள் அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஏனைய கல்வி வலயங்கள் மேற்படி கொடுப்பனவை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் வலிறுத்தியுள்ளார். (த-11)

# களிமண் உருவ வடிவமைப்பு பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

சங்கானை,பெப்.22

சங்கானை அரச இயந்திர மட்கல நிலையத்தில் களிமண் உருவ வடிவமைப்புப் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண தொழில்துறைத் திணைக்களத்தால் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படும் இந்த மட்கல நிலையத்தில் அச்சுகள் மூலம் களிமண்ணால் உருவங்களை வடிவமைக்கும் பயிற்சியும் அதற்குரிய வர்ணங்களைத் தீட்டுவதற்கான பயிற்சியும் நடத்தப்படவுள்ளன.

பயிற்சி பெறவிரும்புபவர்கள் அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி அ.திருச்செல்வத்திடம் தமது விண்ணப்பங்களை நேரிலோ அல்லது கடிதமூலமோ சமர்ப்பிக்குமாறு வலி.மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கேட்டுள்ளார்.

பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புப் படியாக நாளொன்றுக்கு 100 ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-29-202)

## உதயவாக்கு

**வைகறையில் எழுந்திரு. அதில் மூன்று சிறப்புகள் உண்டு. புனிதம், சுகம், மகிழ்ச்சி தரும் செல்வம்.**
**- பெஞ்சமின் பிராங்ளின்.**

## நாளை

மாசி 11
வியாழக்கிழமை
23.02.2006
திதி: தசமி
மாலை: 5.37 வரை
நட்சத்திரம் : மூலம்
முன்னிரவு : 10.02
சுபநேரம் : 08.00 - 09.30
ராகுகாலம் :02.00 - 03.30
(யாவும் பழைய நேரப்படி)

# மானிப்பாய் மகப்பேற்று மனையில் மருத்துவர் பற்றாக்குறையால் சிரமம்

நவாலி,பெப்.22

மானிப்பாய் அரசினர் மத்திய மருந்தக மகப்பேற்றுமனையில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் பொறுப்பதிகாரி இளவாலை அரசினர் வைத்தியசாலைக்குப் பதில் கடமையாற்றுவதற்காக காலையில் செல்கின்றார். இதனால், மானிப்பாய் வைத்தியசாலையில் மாலையில் மட்டுமே நோயாளர்களுக்குச் சிகிச்சையளித்து வருகின்றார். இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (த-100-202)

# ஜி.சீ.ஈ. பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு விண்ணப்பம்

அச்சுவேலி,பெப்.22

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்குப் பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கடந்தகாலங்களில் ஜி.சீ.ஈ. விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்குச் சென்ற ஆசிரியர்களுக்கு அவர்களின் குறியீட்டு இலக்கத்துடன் அவரவரின் சொந்த முகவரிக்குத் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

புதிதாக மதிப்பீட்டுப் பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பாடசாலை அதிபர்களுக்குப் பிரத்தியேகமாக அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தை போட்டோஸ்ரட் பிரதி செய்து விண்ணப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகளால் பூரணப்படுத்தப்பட்டு அதிபர்களால் சிபார்சு செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்தின் மதிப்பீட்டுப் பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

இசுசு எல்வ் (F) 350 42 SRI xxxx அலுமினியம் Ful Body 16 ½ அடி நீளம் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. ஜெகதீஸ்வரன், 021 222 3261. (47090)

## கார் விற்பனைக்கு

16 - xxxx தொடரிலக்கமுடைய Full option Nissan Sunny (Super saloon) Car விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 521/7, பருத்தித்துறை வீதி, நல்லூர். T.P. 0773126835 (47067)

## காணிவிற்பனைக்கு

நாவற்குழி குடியேற்றத் திட்டத்தில் A-9 வீதிக்கு அண்மையில் 25 ஆம் இலக்க வீடும் வளவும் (கிணறும் உண்டு). உரும்பிராய் கற்புலம் வீதியில் கோப்பாய் வீதிக்கு அண்மையில் 5 பரப்பு காணியும் (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:222 5149 (இரவு 7மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். (46986)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், இல.93, இராஜபாதை, திருநெல்வேலியில் 3 அறைகள், 2 கோல்கள் சமையல் அறை, நவீன மலசலகூட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: T.P. 0777652643 (சி-47985)

## கைமாறப்பட்டது

யாழ்ப்பாண பொதுநூலகத்தில் ஆண்கள் லுமாலா சைக்கிள் (இல. 55963317) 19.02.2006 அன்று கைமாறப்பட்டுவிட்டது. தயவுசெய்து கைமாறியவர் சைக்கிளை நூலகரிடம் ஒப்படைத்து தனது சைக்கிளை பெற்றுக்கொள்ளவும். (47109)

## வீடு தேவை

யாழ்.நகரில் கன்னியர்மடம் மற்றும் மத்திய கல்லூரிப் பாடசாலைக்கு அண்மையாக அமைந்த சூழலில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. தொடர்புக்கு: 0714168331. (47108)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) நல்லூர் வீடியோ சென்ரர் வளவு 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-47921)

## தவறிவிட்டது

செபமாலை ஜெகதாசன் என்பவரின் தேசிய அடையாள அட்டை 681254340V, வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன நாவலர் வீதிக்கும் ராசாவின் தோட்ட வீதிக்கும் இடை யில் தவறிவிட்டது. தொடர்புக்கு: No.18, கச்சேரி -நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.No.: 2429, 077- 6688566. (47106)

## கடை வாடகைக்கு

மாதகல் வீதி, பண்டத்தரிப்பு சந்திக்கு அருகில் அமைந்துள்ள கடை வாடகைக்கு விடப்படும். தொடர்பு: T.P.No.: 0777 075033, Dr.S.சிவநேசன், வலந்தலை, காரைநகர். (47103)


## தேவை

எமது சங்கம் பால் கொள்வனவு விற்பனை நிலையம் நடத்துவதற்கு நல்லூர் ஆலயச் சுற்றாடலில் ஒரு அறைக் கட்டடம் தேவை.

தொடர்பு: **பொது முகாமையாளர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.**

தொலைபேசி: 0602212926

(சி-47983) (21.15.16)

## சிறுகுறிஞ்சா இலை தேவை

சிறுகுறிஞ்சா இலை வெட்டிய உடன் உலராமல் fresh ஆக தேவை. சிறு குறிஞ்சா வைத்திருப்பவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:- BIOTEC INTERNATIONAL Ltd.
131/ 2, PALALY ROAD, THIRUNELVELY, JAFFNA.
Telephone 021 4590907.
(விவசாயப்பண்ணைக்கு அருகில்)

(46534)(21.16.15)

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

* தச்சுத் தொழிலாளி
* மின் முறுக்குநர் (வைண்டிங்)
* வயரிங் (வீட்டு மின் இணைப்பாளர்)
* மேசன்
* வெல்டிங்

*(சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)*

தொடர்பு:
011 2389069
060 2144229
0776644580

(47710) (21.16.15)


# யாழ். கூட்டுறவுச் சங்க உணவகம் வெள்ளியன்று திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'உணவகம்' எதிர்வரும் வெள்ளிக் கிழமை தொடக்கம் செயற்படவுள்ளது.

யாழ். சிறாம்பியடி வீதியில் முன்னர் இயங்கிய இடத்திலேயே இந்த உணவகம் மீண்டும் செயற்பட உள்ளது என்று சங்கத்தின் உப தலைவர் எஸ்.ரி.கணநாதன் தெரிவித்தார்.

'யாழமுதம்' எனப்பெயரிடப்பட்ட இந்த உணவகம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும். (ஐ)

# மெய்வன்மை போட்டிகள்

தென்மராட்சிகிழக்கு,பெப்.22

மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் து.பாலசுந்தரம் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராகத் தென்மராட்சி கல்விவலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் கந்தையா சிவகோச்சாரியாரும் சிறப்பு விருந்தினராக கிராம உத்தியோகத்தர் வேல்முருகுவும் கலந்துகொள்வார். (த-122)

* * *

யாழ்ப்பாணம், பெப்.22

தேசிய பாடசாலையான வவுனியா றம்பைக்குள மகளிர் மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை அதிபர் தேநாயகி செபமாலை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட நீதிபதி ம.இளஞ்செழியன் கலந்து கொள்வார். (த-204)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்.மத்தியகல்லூரியின் வர்த்தக மாணவர் மன்றம் 'பங்குச்சந்தையும் நடை முறையும்' என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் பங்குத்தரகரும் முதலீட்டு ஊக்குவிப்பாளருமான எஸ்.வசந்தகுமார் கருத்துரை நிகழ்த்துவார். (த-202)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.22

தென்மராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களின் கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மீசாலை வடக்கு பொதுமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விளையாட்டு விழா தொடர்பான ஏற்பாடுகள், ஆசிரியர், மாணவர் விவரம் பதிதல் போன்றவை கூட்டத்தில் இடம்பெறவுள்ளமையால் வலயத்திற்குட்பட்ட சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா கேட்டுள்ளார். (202)

# முதலாவது சந்தர்ப்பத்தையே முழுமையாகப் பயன்படுத்துவோம்

## அரச பேச்சுக்குழுத் தலைவர் கூறுகிறார்

கொழும்பு,பெப்.22

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கிடைத்துள்ள முதல் சந்தர்ப்பத்தினை முழுமையாகப் பயன்படுத்த விருப்பதாக அரசாங்கத்தரப்பின் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவர் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைக்கென ஜெனீவா புறப்படுவதற்கு முன்னர் அமைச்சர் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு அளித்தார்.

அந்த வாக்குறுதியின்படி விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர் எடுத்த முதலாவது நடவடிக்கை மூலம் மிகுந்த பலன் அடையும் நோக்கில் எமது குழு ஜெனீவா நோக்கிச் செல்கிறது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகள் நெகிழ்வுப் போக்கினைக் கடைப்பிடிப்பார்கள் என்று அரசாங்கம் நம்புகிறது. அவர்களுடன் பேசுவதற்கு எனக்குக் கிடைத்திருக்கின்ற முதலாவது சந்தர்ப்பம் இது.

இதனைச் சரியான விதத்தில் முழுமையாகப் பயன்படுத்தி தீர்வுகாண முயற்சிப்பேன் - என்றார் அவர். (த-13)

# யாழ். கல்வி வலய உயர்தர மாணவர்களின் ஆங்கில பொதுஅறிவுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் வெளிச்சவீடு பாடசாலை அலகு யாழ்.கல்வி வலயத்தில் ஜீ.சீ.ஈ. உயர்தர மாணவர்களிடையே நடத்திய ஆங்கில மொழிமூல பொது அறிவுப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

கோட்ட ரீதியாகப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

### யாழ்ப்பாணம்

**தேசிய பாடசாலைகள்:** முதலாமிடம் (இருவர்) கே. பூர்ணிமா, எஸ்.கார்த்திகா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) 3ஆம் இடம் எஸ்.தவக்குமரன் (யாழ். மத்திய கல்லூரி)

**1.ஏ.பி.தரப்பாடசாலைகள்:** முதலாமிடம் ஜே.தாரணி (யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), 2ஆம் இடம் வை.கஜேந்திரன் (யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி), 3ஆம் இடம் கே.ஆரூரன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி)

**1.சி.தரப்பாடசாலைகள்:** முதலாமிடம் ஜே.றோமியோ சரண்யா (சென். ஜேம்ஸ் மகளிர் மகா வித்தியாலயம்), 2ஆம் இடம் ஆர். மயூரன் (சன்மார்க்க ம.வி), 3ஆம் இடம் வி.ஆன்.மேரி அனுஷா (சென் ஜேம்ஸ் மகளிர் ம.வி).

### நல்லூர்

**1.ஏ.பி.தரப் பாடசாலைகள்:** முதலாமிடம் (இருவர்) என். கிரிதரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி.பாமினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), 3ஆம் இடம் வை.டினேஷ்ஷாந் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**1.சி. தரப்பாடசாலைகள்:** முதலாமிடம் எஸ்.சதீஸ்வரன் (முத்துத்தம்பி ம.வி), 2ஆம் இடம் கே. சாருஜா (செங்குந்த இந்துக் கல்லூரி), 3ஆம் இடம் ஜி.பிரசாந்தன் (முத்துத்தம்பி ம.வி.)

### கோப்பாய்

**1.ஏ.பி.தரப்பாடசாலைகள்:** முதலாமிடம் (இருவர்) கே.குணஜா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ரி.திலீபன் (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), 3ஆம் இடம் பி. கிருத்திகா (இடைக்காடு ம.வி).

**1.சி. தரப்பாடசாலைகள்:** முதலாமிடம் எம்.மயூரா (அச்சுவேலி மத்திய கல்லூரி) 2ஆம் இடம் - கே.கலையரசி (அச்சு வேலி சென்தெரேசா மகளிர் கல்லூரி), 3ஆம் இடம் பி.தர்மினி (அச்சுவேலி சென்தெரேசா மகளிர் கல்லூரி).

(த-202)


## பாரட்டி வாழ்த்துகிறோம்



இலங்கை மின்சாரசபையில்
35 வருடங்கள் கடமையாற்றி
அகவை அறுபதில் ஓய்வுபெறும்
அரியாலை நாவலர்
வீதியைச் சேர்ந்த
**திரு. செல்லப்பா தியாகராசா**

அவர்களை பல்லாண்டு காலம் சிறப்புற வாழ இறையருள் வேண்டி மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

மகன், மைத்துனர் (லண்டன்).

(...15.16.54)

## திருமண வாழ்த்து



மணமகன்
தவில் மேதை
N.R.S.சுதாகரன்

மணமகள்
சுகந்தினி

*தவிலொலி மன்னன் - திரு*
*மணவொலி கண்டான் - இல் வாழ்வு*
*இன்னொலியாக வாழ்க, வாழ்க.*

வாழ்த்தும்
கலைமகள் ஒலி, ஒளிச் சேவையினரும்,
கரணவாய் வடக்கு முத்த விநாயகர் ஆலய
6ஆம் உற்சவ உபயகாரரும்.

(சி-47998) (54.16.21.15)

## துயர் பகிர்கின்றோம்

*எமது பாடசாலை ஆசிரியை திருமதி மாலினி ஸ்ரீதரன் அவர்களின் அன்புக் கணவர்* **மாணிக்கம் ஸ்ரீதரன்** அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை,
கொடிகாமம்.

(47111) (39.16.15)

## COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
Computerized Accounting
*Accpac+Quick Books Pro+MYOB*
ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

**Course Contents**
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- Fore Casting
- Business Planing

80% Off
*Tally Accounting Package*
புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம்
25/02/2006 :- 10.00-12.00
26/02/2006 :- 02.00-04.00

## விநியோகஸ்தர்கள் தேவை

"மை கோலா" குளிர்பான விநியோகஸ்தர்கள் யாழ். மாவட்டத்திற்குத் தேவை.

விருப்பம் தெரிவிப்பவர்கள் தற்போதைய ஏஜன்சி விவரம், வாகன, களஞ்சிய வசதி விவரங்களுடன் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

The Marketing Manager,
**My Beverage Marketing (PVT.) Ltd.**)
555/5B, Gonahena Road,
Kadawata,
(மேலதிக தகவல் தெரிந்து கொள்வதற்கு)
011-2971722/2972695/0773065193

(47112) (39.15.16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. உயர்தர விஞ்ஞான பாட பெறுபேறு மாற்றத்தால் பரீட்சார்த்திகள் பெரும்சிரமம்

கொழும்பு,பெப்.22

கடந்த ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சை இர சாயனவியல் வினாத்தாள்கள் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் வெளியிடப்பட்டுள்ள புதிய பெறுபேறுகளுக்கு அமைய, முன்னர் வெளியிடப்பட்ட பெறுபேறுகள் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளமையைத் தொடர்ந்து எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாகச் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் உப தலைவரான கலாநிதி எல்.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

பல்கலைக்கழகங்களில், மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கையில் எந்தவொரு மாற்றத்தையும் மேற்கொள்ள வேண்டாமென சகல பீடாதிபதிகளும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு தெரிவித்துள்ளமையே பிரச்சினை எழுவதற்குக் காரணமாகியுள்ளது.

ஏற்கனவே வெளியிடப்பட்ட வெட்டுப் புள்ளி (Z scor) விகிதாசாரத்துக்கு அமைய, பல்கலைக்கழக பீட அனுமதி தொடர்பாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் புதிய பெறுபேறுகள் அவற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடுமெனவும் பல்கலைக்கழக ஆணைக்குழுவின் உப தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய நிலையில் பல்கலைக்கழக அனுமதிக்கு ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்கள், இந்த மாற்றங்கள் காரணமாகத் தமது அந்த வாய்ப்புகளை இழப்பதால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய மனத்தாக்கங்களைக் கருத்தில் கொண்டு, அது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் பெறப்படவுள்ளது. அத்துடன் புதிய 'இஸட் ஸ்கோர்' புள்ளிகள் மூன்று வாரங்களில் வெளியிடப்படுமெனவும் கலாநிதி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய பெறுபேற்றுபட்டியலுக்கு அமைய, முன்னைய பெறுபேறுகளுக்கு ஏற்ப விஞ்ஞான பாடங்களில் இலங்கையில் அதி உயர் புள்ளியைப் பெற்ற மாணவரைத் தவிர ஏனைய அனைவரது இடங்களும் மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன.

புதிய பெறுபேறுகள் தொடர்பான மாற்றம், முன்னைய பெறுபேறுகளால் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றிராத 1335 பேரைத் தகுதி பெற்றுள்ளவர்களாக மாற்றியுள்ளது. அத்தோடு பரீட்சைக்குத் தோற்றிய சகலரதும் 'இஸட் ஸ்கோர்' புள்ளிகளும் மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன.

இந்நிலையில், புதிய பெறுபேறுகள் காரணமாக, முன்னர் வெளியிடப்பட்ட பெறுபேறுகளுக்கு அமைய பெரும் எண்ணிக்கையான மாணவர்களின் இடங்கள் மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளன எனவும் பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவது தொடர்பாக எத்தகைய முறையொன்று கையாளப்படவுள்ளது என்பது தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு அமைய மேற்கொள்ளப்படவுள்ளது என பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதியன்று அத்தீர்மானம் குறித்து தமக்கு அறிவிக்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இம்முறை இடம்பெற்ற பரீட்சையில் போதிய புள்ளிகளைப் பெறாத மாணவர்களுக்கு எதிர்வரும் உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க விசேட வாய்ப்பொன்றை வழங்க பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அது தொடர்பான விண்ணப்பத் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## தொழிலுக்குச் சென்ற மீனவர் சடலமாக மீட்பு!

மன்னார் பெப். 21

மன்னார் பேசாலைக் கடற்பரப்பில் தொழிலுக்குச் சென்ற மீனவர் நேற்றுமுன்தினம் மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

ஜேம்ஸ் ஜீடின் கிளமன் பீரிஸ் (வயது - 34) எனும் மீனவரே கடலில் பலியானவர் என மன்னார்ப் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை வழமைபோல் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற இவர் பின்னர் வீடு திரும்பவில்லை. இது குறித்து வீட்டார் பொலீஸில் முறைப்பாடு செய்தனர்.

வீடு திரும்பாதவரைத் தேடும் நடவடிக்கையும் இடம்பெற்றது. பேசாலைக் கடலில் நங்கூரமிட்டபடி அவரின் பிளாஸ்டிக் படகு நின்றது. எனினும், குறித்த மீனவர் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் தலைமன்னார் கொல்லியடிப்பிட்டியில் குறித்த மீனவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளதாகத் தலைமன்னார் பொலீஸார் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம். அப்துல்லாஹ் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். (க)

# ஜெனீவா பேச்சுகளை ஒட்டி இன்று சர்வமதத் தலைவர்கள் ஒன்றுகூடல்

## பண்டாரநாயக்க மண்டபத்தில் 350 பேர் கூடுவர்

கொழும்பு,பெப்.22

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி நான்கு வருடங்கள் பூர்த்தியாகும் நாளில் ஜெனீவா பேச்சுகள் ஆரம்பமாகவுள்ளதையொட்டி 350 பேரைக்கொண்ட சர்வமதத் தலைவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வொன்று இன்று புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய சமாதானப் பேர்வை இந்த நிகழ்வுக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தது. நிகழ்ச்சிபற்றி விளக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு கொழும்பு தேசிய வாசிகசாலை கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. அதில் தெரிவிக்கப்பட்டதாவது:-

நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுகள் வெற்றியடையவேண்டும். இது தொடர்பாக சகல அரசியல் கட்சிகளையும் அர்ப்பணிப்போடு செயற்பட நாம் அறிவுறுத்தியுள்ளோம். நடைபெறவுள்ள சர்வமத ஒன்றுகூடலிலும் சமாதான பேச்சுகள் தொடர்பான அறிக்கை ஒன்றை ஜனாதிபதி மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அனுப்பிவைக்கவுள்ளோம்.

இந்தப் பேச்சுகளை (ஜெனீவா) அவதானிக்கவென சிவில் சமூகத்தின் சார்பில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொள்ள ஜெனீவா சென்றுள்ளனர். - எனவும் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் 'பவ்ரல்' அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிக்கோ, தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த டாக்டர் ஜெகான் பெரேரா, எஸ்.பி.நந்தன் மற்றும் அன்று சமரதுங்க ஆகிய முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். (க)

# உள்ளூராட்சித் தேர்தல்களின் பின்பு எரிபொருள்களின் விலைகள் உயரும்?

கொழும்பு,பெப்.22

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிந்த கையோடு பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றில் விலைகள் அதிக அளவில் அதிகரிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

எரிபொருள்களின் விலைகளை உடனடியாக அதிகரிக்கும்படி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசை வேண்டிக்கொண்டது. ஆனால், அரசு உடனடியாக அந்த நடவடிக்கையை மேற்கொள்ள விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ளதால் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டால் அது அரசுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதால் எரிபொருள்களின் விலைகளை உயர்த்த அரசு உடன்படவில்லை.

எனினும், உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிவடைந்த கையோடு உலகச் சந்தையில் அதிகரித்துவரும் எரிபொருள்களின் விலைகளுக்கேற்ப இலங்கையில் எரிபொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படும் எனத் தெரியவருகிறது. (க)

## பட்டப்பின் டிப்ளோமா மீள்பரீட்சைகள் அடுத்த மாதம்!

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ். பலக்லைக்கழக பட்டப்பின் டிப்ளோமா குடித்தொகை அபிவிருத்தி கற்கை நெறி மாணவர்களுக்கான மீள்பரீட்சைகள் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இதற்கென விண்ணப்பித்த மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் டிப்ளோமா பொதுநிர்வாக மூன்றாவது அணி மாணவர்களுக்கான இரண்டாம் பருவ பரீட்சைகளையும் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளை யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீடத்தில் பெற்றுக்கொள்ளலாம் என உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (த-12)

# ஜனாதிபதி மஹிந்த நாட்டை ஆளட்டும் சு.கட்சியை நான் பார்த்துக்கொள்கிறேன்

**சந்திரிகா தெரிவிப்பு**

கொழும்பு,பெப்.22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையேயான போட்டி தற்போது உக்கிரமடைந்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் ஜனாதிபதியும் சந்திரிகாவும் அலரிமாளிகையில் சந்தித்தபோது கட்சித் தலைமை தொடர்பாக இருவருக்குமிடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்போவதாக சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன எனவும் கட்சித் தலைமையைப் பெறுவதற்கு இவ்வாறான முயற்சிகள் பொருத்தமற்றவை எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடுமையான விதத்தில் தெரிவித்துள்ள சந்திரிகா, பத்திரிகைகளில் செய்திகளை வெளியிடுவதால் மட்டும் சுதந்திரக்கட்சியின் தலைமையைப் பெற்றுவிட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனாவைச் சந்தித்த சந்திரிகா, தான் கம்பஹா மாவட்டத்தின் பதில் சுதந்திரக் கட்சித் தலைவர் என்பதால் அந்த மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் பணிகளைக் கவனிக்கவுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். கம்பஹா மாவட்டத்திற்கான சுதந்திரக் கட்சித் தலைவர் அனுர பண்டாரநாயக்க தற்போது சுகவீனமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் தலைவி என்ற வகையில் தொகுதி அமைப்பாளர்கள் பலரை சந்திரிகா நியமிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அது பற்றி ஜனாதிபதிக்கும் தெரிவிக்குமாறு செயலாளர் மைத்திரிபால சிறிசேன, சந்திரிகாவிடம் கூறியபோது கட்சியின் தலைவி என்ற வகையில் தொகுதி அமைப்பாளர்களை நியமிக்கும் அதிகாரம் தமக்கு உள்ளது எனவும், அது குறித்த ஆலோசனையை ஜனாதிபதியிடமிருந்து பெறத் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளார். நாட்டை ஆளுவதற்கான அதிகாரமே ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் தலைவி என்ற விதத்தில் கட்சிப்பணிகளைத் தான் மேற்கொள்வேன் எனச் சந்திரிகா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்துள்ளார். (க)

# இந்து கலாசார அமைச்சின் தொழிற் பயிற்சி மாணவர்கள் தமக்கு அநீதி என முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.22

இந்து கலாசார அமைச்சின் தொழிற் பயிற்சிநெறியில் பயின்ற மாணவர்களில் ஒரு பகுதியினர் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அமைச்சுக்கெதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர்.

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி இந்து சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சு என்பனவற்றால் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட மின் இணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல் போன்ற பயிற்சிநெறிகளில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஒரு பகுதி மாணவர்களுக்கு கொடுப்பனவுகள் சரியாக வழங்கப்படவில்லை என்று இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் மதியம் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தின் முன்பாக கூடிய மாணவர்கள் அங்குவைத்து தமது முறைப்பாடு அடங்கிய கடிதம் ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பதிகாரிக்கு முகவரியிட்டு சமர்ப்பித்துள்ளனர்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் வருமாறு -

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்திக்கு இந்த சமய அலுவலர்கள் அமைச்சு மற்றும் வாழ்க்கை தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சினால் 29.09.2005 ஆம் திகதி அன்று நடைபெற்ற நேர்முகத்தேர்வின் மூலம் இப்பயிற்சிக்கு உள்வாங்கப்பட்டோம்.

ஆகவே, மாணவர்களாகிய நாம் மின் இணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல் ஆகிய பயிற்சிநெறிக்கு இணைந்தோம்.

நியமனக் கடிதத்தில் கூறப்பட்டபடி எமக்கு மாதாந்தம் 3ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவாக வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது. 5 மாதங்கள் முடிவடைந்தும் இதுவரை ஒரு மாதத்துக்கான கொடுப்பனவு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஏனைய கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை.

இப்பயிற்சிநெறியை தொடர்ந்து மேற்கொள்வதற்கு உபகரணங்களும் வழங்கப்படவில்லை. இப்பயிற்சி நெறியை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றோம்.

இதனால், பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்கின்றோம். மாணவர்களாகிய எமது எதிர்காலம் பெரிதும் பாதிக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, உரியவர்களுடன் தொடர்புகொண்டு எமக்கு உரிய தீர்வினைப் பெற்றுத்தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-12-14)

## இலங்கைக் கடற்படையினரால் வெளிநாட்டு மீனவர்கள் கைது

காலி,பெப்.22

இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடித்த வெளிநாட்டு மீன்பிடிப் படகு ஒன்றினைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

படகில் இருந்த 16 வெளிநாட்டவர்களையும் மீன்பிடிப் படகினையும் காலித்துறைமுக பொலீஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர் என்று தென்பிராந்திய உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஜயந்த கமகே தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்செய்ய ஏற்பாடு செய்துள்ளதாகவும் துறைமுக உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (த-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
## துளசிகா நாகேந்திரன்

தோற்றம்
30.04.1993

மறைவு
04.03.2005

திதி: 22.02.2006

குயில் கூவும் நேரம் உன் குரல் கேட்குது
துளசிகா- எம்
குலம் விளங்க உதித்த குல விளக்கே
- துளசிகா!
ஏண் எழுத்தில் திறங்காட்டி விளங்கிய
எம் குட்டி துளசிகா!
எங்கம்மா சென்றீர் எம்மை விட்டு துளசிகா!

உன் பிரிவால் துயருற்றிருக்கும்:
சித்தப்பா, சித்தி,
அன்புத் தங்கைகள்
ஸ்ருதிகா, சுபோதினி.

369/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

(47097)(32-21.15.34)

# அளவெட்டியில் நாய்களால் தொல்லை

யாழ்ப்பாணம், பெப்.22

அளவெட்டிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அளவெட்டி மலை வேம்படிப் பகுதியிலேயே அதிக எண்ணிக்கையில் இந்தக் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது. அப்பகுதியில் உள்ள இராணுவத்தினர் தமது முகாம்களில் வளர்த்துவரும் நாய்களே காலை, மாலை நேரங்களில் வீதிகளில் நின்று தொல்லை புரிகின்றன.

இதனால் பாடசாலை மாணவர்கள், வீதியால் செல்வோர் என பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-13)

# விவசாயச் சம்மேளனக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.22

வட்டு.சங்கரத்தை விவசாயச் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வட்டு.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-202)

# அரச ஊழியர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

ஏறாவூர், பெப்.22

தெரிவுசெய்யப்பட்ட ஆறு உயர் அரச சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை என்பவற்றை எதிர்வரும் மே மாதத்தில் கொழும்பில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மேற் கொண்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை, கணக்காளர் சேவை, விஞ்ஞான சேவை, பொறியியல் சேவை, பொலீஸ் சேவை மற்றும் கட்டட சேவை ஆகிய ஆறுசேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு இப்பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் டி.திஸ நாயக்க அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகள் முதல்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை எனவும், இரண்டாம் தடவையாகத் தோற்றுவதாயின் பரீட்சைக் கட்டணமாக 115 ரூபாவைச் செலுத்த வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர் ஊடாக எதிர்வரும் மார்ச் மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இப்பரீட்சை தொடர்பான விரிவான விவரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியான அரசாங்க வர்த்தமானியில் அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன.

(க)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
19 - 01 - 1919

உதிர்வு
23 - 01 - 2006

## திருமதி அன்னம்மா நவரத்தினம்
(பெரியம்மா)

நேற்றிருந்தீர் நிஜமாக; இன்றில்லை!
நினைவதிலே தான் நிறைந்து நிற்கின்றீர்
போற்றி செய்து வைரவரின் அடி தொழுதீர்
போயமா்க; இறையடியின் நிழலிலே!

- குடும்பத்தினர்.

புளியடி வளவு,
சுன்னாகம் தெற்கு.

(சி-47973)(21.15.34)

## யாழ்ப்பாணம் - மாநகரசபை
# பகிரங்க ஏல விற்பனை

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான யூபிலி மகப்பேற்று நிலையத்தினுள் (மடத்தடி தண்ணீர் தாங்கிக்கு அருகில்) மருதமரமும் அதன் கிளைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. 04.03.2006ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவ்விடத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலத்தின் ஆரம்பத் தொகை ரூபா 25,000/- ஆகும்.

ஏலத்தில் சித்தி பெற்றவர் உடனடியாக பணத்தைக்கட்டிப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதுடன், குறிப்பிட்ட இடத்திலிருந்து மரங்களை அப்புறப்படுத்திக் கொள்ளவேண்டும். உடன் அப்புறப்படுத்தாவிடின் ஏற்படும் இழப்பை சபை பொறுப்பேற்காது என்பதை அறியத்தருகின்றேன்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15.02.2006 (சி-46541)(21.15.34)

சீ.வி.கே.சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# 62ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
## கனகசிந்தாமணி இராசலட்சுமி

பிறப்பு
15-07-1944

இறப்பு
22-12-2005

கடந்த 22.12.2005 அன்று காலமான எனது சகோதரியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்தியினை வழங்கியோருக்கும் சகல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சகோதரி,
திருமதி புஸ்பராணி பஞ்சரத்தினம்
(யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், ஓய்வு பெற்ற ஆசிரியை).

முகவரி
'ஜெயபதி' ராஜபாதை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(சி-47983)(21.15.34)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில் : 03.08.1981

ஆண்டவன் அடியில் : 09.01.2006

பாசத்தின் திருவுருவே!
பாசமகன் பிரணவனே!
பாதி வழியில் அன்னை எனை
பரிதவிக்க விட்டு விட்டு நீ
பறந்து சென்றது ஏனைய்யா?

செல்வன்
## பஞ்சரத்தினம் பிரணவன்

கடந்த 09.01.2006 அன்று காலமான எனது மகனின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்தியினை வழங்கியோருக்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பும் உதவியும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள்,அயலவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி புஸ்பராணி பஞ்சரத்தினம்
(தாய்)
(யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், ஓய்வுபெற்ற ஆசிரியை)

முகவரி:
'ஜெயபதி' ராஜபாதை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

# 16 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## சுந்தரம்பிள்ளை இராமநாதன்

தோற்றம்: 19.12.1952
மறைவு: 07.02.2006

கடந்த 07.02.2006 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சுந்தரம்பிள்ளை இராமநாதன் அவர்களின் மறைவின் போது ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தும் ஆறுதல் கூறியும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப் பிரசுரம் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் சுழிபுரம் கிழக்கு ''தாஸ் களஞ்சியம் '' உரிமையாளருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, மாமா குடும்பத்தினர்,
சகோதரர்கள், சகோதரிகள்
குடும்பத்தினர்.

செட்டிகுறிச்சி,
சுழிபுரம் வடக்கு.
[46854]
[15-34-51-21]

# மரண அறிவித்தல்

## முருகேசபிள்ளை சந்திரசேகரம்
(நயினாதீவு)

நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் கனடாவில் வசித்தவருமாகிய முருகேசபிள்ளை சந்திரசேகரம் அவர்கள் 18.02.2006 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகேசபிள்ளை - அபிராமிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற நாகமுத்து- நாகலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் தவரூபராணி (கனடா), கலைவண்ணன் (கனடா), நந்தகுமாரன் (லண்டன்), வடிவேற்கரசன் (கனடா), மனோகரராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சர்வானந்தராஜா (லெட்சுமி பவான் - கொழும்பு), பாமினி (கனடா), வாசுகி (லண்டன்), கலையரசி, கிருஷ்ணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் அமலினி, ஞானகன், அபிநாத், துஷானி, துஷாந், விஷ்ணகன், கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் மங்கலேஸ்வரி, நாகம்மா, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் பரமானந்தம், விசாலாட்சி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கனகசபை, அம்பலவாணர் மற்றும் செல்லம்மா, பூபாலசுந்தரம் (லண்டன்), காலஞ்சென்றவர்களான முத்தையா, மதியாபரணம் மற்றும் சண்முகநாதன், நாகராசா, மகேஸ்வரி, பரமேஸ்வரி, ஜெகதாம்பிகை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2006) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு.பரமானந்தம்
(சகோதரன்).

நயினாதீவு- 05. (47098)(21.15.34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம்

புதுக்குடியிருப்பு,பெப்.22

கிறிஸ்துவுக்கான இளைஞர் அமைப்பினால் பாடசாலை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கென கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 90 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தின் கல்வி நிலையை உயர்த்துவதற்கும் கல்விக்கான ஆர்வத்தினை ஏற்படுத்தவும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இந்த அமைப்பினால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

(த-353)

## பரந்தன் - முல்லை. வீதியில் மூன்று பாலங்கள் சேதம்

கிளிநொச்சி,பெப்.22

பரந்தன் - முல்லை. நெடுஞ்சாலையில் உள்ள மூன்று பாலங்கள் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

இதனால், இவ்வீதியூடான போக்குவரத்துகளில் விபத்துகள் ஏற்படும் நிலை காணப்படுகிறது.

முரசுமோட்டை 2ஆம் கட்டையில் அமைந்துள்ள றோமன் கத்தோலிக்கப் பாடசாலைக்கு முன்பாகஉள்ள பாலம், விசுவமடுச் சந்திக்கும் 12ஆம் கட்டைச் சந்திக்கும் அருகில் உள்ள பாலம், றெட்பானாச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள பாலம் ஆகியனவே இவ்வாறு சேதமடைந்த நிலையிலுள்ளன.

பாலத்தின் ஓரப்பகுதிகளில் பாரிய சிதைவுகள் ஏற்பட்டுள்ளதுடன் நடுப்பகுதிகளில் குழிகள் ஏற்பட்டுள்ளன.

பாலத்தின் நடுப்பகுதியில் ஏற்பட்டுள்ள குழிகளில் சிறிய தடிகளை ஊன்றி அவற்றில் அபாயத்தை அடையாளப்படுத்தும் வகையில் சிவப்புத் துணிகள் கட்டப்பட்டுள்ளன.

இவற்றை விரைவாக புனரமைக்கத் தவறினால் இந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்வதில் பெரும் நெருக்கடி நிலை உருவாகும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(த-307)




# சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியோர் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என விசனம்

கிளிநொச்சி ,பெப்.22

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் சுகாதாரத் தொண்டர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டு பல வருட காலமாகப் பணியாற்றிவரும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்குப் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மகஜர் கையளிக்கப்பட்டது.

கடந்த பல ஆண்டுகளாக எமது பகுதியில் நிலவிய போராட்ட சூழ்நிலை காரணமாக வைத்தியசாலைகளில் ஏற்பட்ட நோயாளர்கள் தொகை அதிகரிப்பைச் சமாளிக்க முடியாத வகையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவியது.

அதனால், ஏற்பட்ட பல நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக அவ்வப் பகுதிகளில் இருந்த இளைஞர், யுவதிகளைத் தொண்டர் சேவைக்கு வருமாறு வைத்திய அதிகாரிகளும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கேட்டுக்கொண்டதற்கிணங்க வந்து இணைந்து கொண்டோம்.

நிலைமை தொடர்கதையாக இருந்தபடியால் பல ஆண்டுகளாக எதுவித கொடுப்பனவும் இன்றித் தொடர்ந்து சேவையாற்றி வந்தோம்.

கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக மட்டும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியால் மிகச்சிறிய - எமது சீருடைகள், போக்குவரத்து போன்றவற்றிற்கே போதாத - தொகை உதவிக்கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருகின்றது.

எமது சேவை ஒரு நிரந்தர சேவை போன்று கருதப்பட்டு நிரந்தர சேவையாளர்களுக்குரிய பணிகள் யாவும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவ்வப்போது பல நிறுவனங்களினாலும் பல்வேறுபட்ட அடிப்படை பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

தாதியர், மருத்துவமாது, மருந்துக் கலவையாளர்கள், காரியாலய உதவியாளர், காவலாளிகள், சாதாரண தொழிலாளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர், மின்பிறப்பாக்கி, நீர் இறைக்கும் இயந்திர இயக்குநர்கள் போன்றோரது கடமைகளைச் செய்துவருகின்றோம்.

அப்படியிருக்க இதுவரை எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. எனவே, எமது நிலையைக் கருத்திற்கொண்டு நிரந்தர நியமனத்துக்குள் உள்வாங்கும்படி கேட்டுக் கொள்கின்றோம் - என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-307)



பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கான கால்கோள் விழா சமீபத்தில் நடைபெற்றது. 4ஆம் கட்டை அம்மன் ஆலயத்தில் மாணவர்கள் மலர்மாலை அணிவித்துக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:பூநகரிச் செய்தியாளர்)*

## நாகம்மை ஆலயப் பூசையில் காட்சி கொடுத்த நாகம்

ஒட்டுசுட்டான்,பெப்.21

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள கற்சிலைமடு நாகம்மை ஆலயத்தில் கடந்த 13 ஆம் திகதி பூசை நடைபெற்றபோது பூசை முடியும்வரை நாகபாம்பு அம்பாள் சிலையருகில் காட்சி கொடுத்தது.

இக் காட்சியை ஆலயத்திற்குச் சென்றோர் உட்பட ஏராளமானவர்கள் பார்வையிட்டனர்.

(த-341)

## இலங்கை வங்கியின் முல்லைத்தீவுக் கிளை சேவை நேரம் நீடிப்பு

புதுக்குடியிருப்பு,பெப்.22

இலங்கை வங்கியின் முல்லைத்தீவுக் கிளை தனது சேவை நேரத்தினை பிற்பகல் 2.30 மணிவரை நீடித்துள்ளது.

இலங்கை வங்கியின் முல்லைத்தீவுக் கிளை யுத்தம் காரணமாகப் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்து இயங்கிவந்தது. முல்லைத்தீவுப் பிரதேசத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றிய பின்னர் வங்கியின் நீடித்த கரும்பீடம் ஒன்றை முல்லைத்தீவில் செயற்படுத்த ஆரம்பித்தது.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்ட காரணத்தால் அது முழுமையாக அழிவடைந்தது. எனினும், இப்பிரதேச மக்களின் நன்மை கருதி தனது கிளை ஒன்றைத் தற்போது முல்லைத்தீவில் செயற்படுத்தி வருகிறது.

வாரத்தில் செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களில் முகாமையாளர் இந்தக் கிளையில் இருப்பார் என்றும் - ஆழிப்பேரலை தொடர்பான கொடுப்பனவுகளை மக்கள் இங்கேயே பெறலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-353)

## பற்சுகாதாரம் குறித்த கட்டுரைப் போட்டி

கிளிநொச்சி,பெப்.22

தமிழீழ சுகாதார சேவையினரால் இம்மாதம் பற்சுகாதார மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து பாடசாலை மாணவர்களிடையே 'பற்சுகாதாரம்' எனும் தலைப்பில் கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளைத் தமிழீழ சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் 300 சொற்களுக்கு மேற்படாதவாறு கட்டுரைகளை எழுதி பாடசாலை அதிபரின் சிபார்சுடன் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் 'பொறுப்பாளர், நடமாடும் பற்சுகாதாரப் பிரிவு, தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப்பணியகம், கிளிநொச்சி' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் கா.ஓவியன் கேட்டுள்ளார்.

(த-341-203)

## கால்நடைத் திணைக்களத்தினரின் விசேட நடமாடும் சேவைகள்

ஒட்டுசுட்டான்,பெப்.22

ஒட்டுசுட்டான் கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தினரால் கால்நடைகளுக்குச் சிகிச்சைகள் வழங்குவதற்கான விசேட நடமாடும் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

முதற்கட்டமாக கோழிகளுக்கு ஏற்பட்டு வரும் அம்மைநோய், கொள்ளைநோய் போன்றவற்றைத் தடுப்பதற்கான தடுப்பூசிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை தொடக்கம் முத்துஐயன்கட்டு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் போடப்படவுள்ளன.

எனவே, கோழிவளர்ப்பில் ஈடுபடுவோர் கோழிகளுக்கான தடுப்பூசி மருந்தை ஏற்றுமாறு விவசாயப் போதனாசிரியர் கேட்டுள்ளார்.

(த-341-203)

## கேணல் கிட்டு வரைந்த ஓவியங்களின் கண்காட்சி இன்றுமுதல் மன்னாரில்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதி கேணல் கிட்டு வரைந்த ஓவியங்களின் 'உயிர்பெறும் காட்சிகள்' என்னும் ஓவியக்காட்சி இன்று புதன்கிழமை தொடக்கம் மூன்று நாள்கள் மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. மன்னார் மாவட்ட தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் ஏற்பாட்டில் இக் கண்காட்சி இடம்பெறும்.

இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் இலுப்பைக்கடவை மகாவித்தியாலயத்திலும் -

நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நுண்கலைக் கல்லூரி மன்னார் வளாகத்திலும் -

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பண்டிவிரிச்சான் மகாவித்தியாலயத்திலும் கண்காட்சி நடைபெறவுள்ளது.

(த-7)

## மன்னாகண்டல் பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படவில்லை

ஒட்டுசுட்டான்,பெப்.22

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள மன்னாகண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படாமையால் பெருஞ்சிரமம் ஏற்பட்டுள்ளதாக அந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் முன்னர் கடமையாற்றிவந்த அதிபர் இடம்மாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இருந்தும் இதுவரை இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு உரியவர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதன் காரணமாகப் பாடசாலைச் செயற்பாடுகளில் பெரும் இடையூறுகள் ஏற்படுவதாகவும் -

எனவே, உரியவர்கள் இந்தப் பாடசாலை மாணவர்களின் நன்மைகருதி விரைவில் இப்பாடசாலைக்கு ஒரு அதிபரை நியமிக்க வேண்டும் என்றும் பெற்றோர் கேட்டுள்ளனர்.

(த-341-203)

## வவுனியாவில் தடுப்பு மருந்து

தேசிய தடை மருந்து ஏற்றல் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் ஜப்பான் மூளைக்காய்ச்சலுக்கான தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்தில் 6-10 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கும் கிராமங்களில் 1-5 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் இந்த மருந்து வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவை அண்டியுள்ள மாவட்டங்களான யாழ்ப்பாணம், அனுராதபுரம், பொலநறுவை போன்ற மாவட்டங்களில் கடந்த ஆண்டு இந்த நோய்க்கு உட்பட்டவர்கள் பலர் இனங்காணப்பட்டதாகவும் இந்த நோய் காரணமாக பலர் இறந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-164)



முல்லைத்தீவு மாவட்டப் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் நடாத்தப்பட்டுவரும் இலவச கணனிப் பயிற்சி வகுப்பில் ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்குச் செயன்முறைப் பயிற்சி வழங்குவதையும் பயிற்சி வகுப்பில் பயிற்சிபெறும் மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரவிழிகளுடன் ஓராண்டு

தோற்றம் 12 . 02 . 1942



மறைவு 04 . 03 . 2005

### அமரர் நாகலிங்கம் செல்லத்துரை

திதி: 22.02.2006

அன்பின் உறைவிடமாகி எமையெல்லாம்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய
எம் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உம் நினைவு நிழலாய்த் தொடர்கின்றது...
கடமையெல்லாம் முடிந்ததென்றா
காலன் உம்மைக் கவர்ந்தெடுத்து
எம்மை கண்ணீரில் மூழ்கவிட்டான்?
கண்ணில் ஈரம் காயவில்லை நெஞ்சில்
பாரம் குறையவில்லை...
உங்கள் பாசத்தை நாம் தொலைத்தினால்
பரிதவித்து நிற்கின்றோம்
நாங்கள் இன்று
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுதான் ஆனாலும்
உங்கள் நினைவெல்லாம் - எம்
நெஞ்சை விட்டு நீங்காதய்யா!

தகவல்:
66, இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
திருமதி ச.மங்கையர்க்கரசி (மச்சாள்).

(47076)(11-17-51)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 10 . 02 . 1950



உதிர்வு 04 . 03 . 2005

### அமரர் எஸ். கே. சிவபாலன்

இசைப்பேராசிரியர் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரம்-இந்தியா.
பண்ணிசைக்கலாநிதி-சங்கீதவித்துவான், திருமுறைத்திலகம்- இசைவாரிதி.
(பாரதரத்னா- பண்ணிசைக்கற்பகம்)

திதி:அபரபக்க நவமி

கருணை உள்ளம் படைத்தவரே!
கடல் கடந்து வந்தோமே கண்டது
என்ன ஐயா! நாங்கள்உள்ளம் நொந்து
மனம் தேறிப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று(22.02.2006) புதன்கிழமை சித்தன்கேணி இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், திருமுறைப்பாராயணமும், மதியபோசனமும் நடைபெறவுள்ளதால் உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்திபெற்று, அமைதிபெற அனைத்துத் தெய்வங்களையும் வேண்டுகின்றோம்.

உங்கள் நினைவோடு வாழும்:
சகோதரிகள், சகோதரன்,மைத்துனர்,பெறாமக்கள்.

க.சிவயோகராணி.J.P
பாடசாலை ஒழுங்கை,
சித்தன்கேணி.

ஓம் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்,
கந்தசாமி ஆசிரியர் வீதி,
கந்தரோடை.

[46501][11-17-51]


## IIS

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 18.02.2006
பிரிவு II : 22.02.2006
பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதி நாள் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

இதோ அறிமுகப்படுத்துகின்றோம்

### சிதாரா வர்ம தைலம்


உடைவு, முறிவு,வீக்கம், சுளுக்கு, இரத்தக்கட்டு, முழங்கால் மூட்டுவலி, குதிக்கால்வலி ஆகியவைகளுக்கு காலை, மாலை பூசி வரவும்

Reg. Number 10171 ARPR NO. 228
(வெளிப் பிரயோகத்திற்கு மட்டும்)

சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone 222 2567

(c/47681) (21.11.15)


## 19ஆவது வருட நினைவலைகள்



### கிருஷ்ணபிள்ளை கலைச்செல்வன்

மலர்வு 30-12-1963
உதிர்வு 22-02-1987

திதி: அபரபட்ச நவமி

அன்புமுகம் காட்டி
அமைதிக் கதை பேசி
நெஞ்சம் நிறைந்த - செல்வா
திருக்கோவில் பணிதனை
இயன்றவரை செய்துவந்தாய்.

கிருஷ்ணபிள்ளை
(வேலுப்பிள்ளை)
குடும்பத்தினர்.

23, காரைக்காட்டுலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(47091)(32-21-15-19)


## மீண்டும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் (PARCEL) சேவை

பிரான்ஸ், ஜேர்மனி,சுவிஸ், இத்தாலி,நோர்வே,டென்மார்க், லண்டன்,கனடா,அமெரிக்கா,ஆஸ்திரேலியா,நியூசிலாந்து

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப்பெருள்கள்,வீடியோ நாடாக்கள், கடிதங்கள் ஆகியவற்றை நாமே பொதிசெய்து அனுப்புகின்றோம், இதற்காக சிறிய கட்டணம் அறவிடப்படும். ஒரு பொதியின் நிறை இரண்டு கிலோவுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

ஒரு கிலோவுக்குரிய கட்டணம் 1400/= மட்டும்

மூன்று நாள்களில் பொதிகள் ஒப்படைக்கப்படும்

### விசேட விலைக் கழிவு

5 கிலோவுக்கு மேல் அனுப்பும் பொதிகளுக்கு கட்டணம்

| | | |
|---|---|---|
| ஒரு கிலோவுக்கு | லண்டன் | 450/= |
| | சுவிஸ் | 600/= |

### குறைந்த கட்டணத்தில் கொழும்புக்கான பிரயாண ஒழுங்குகள்

விமான மூலமாக

| | |
|---|---|
| யாழ் - கொழும்பு | 6750/= |
| யாழ் - கொழும்பு - யாழ் | 11800/= |

வான் மூலமாக

| | |
|---|---|
| யாழ் - கொழும்பு | 1100/= |

### RAINBOW TRAVELS & TOURS

32-1 / 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3237 , 0777 328219.
(அபிநயா நகை மாடத்துக்கு மேல்)


## மரண அறிவித்தல்

### திருமதி சிறீதரன் சாந்தி



ஸ்ரீ வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் நாட்டை வதிவிடமாகவும் கொண்ட சிறீதரன் சாந்தி 18-02-2006 சனிக்கிழமை அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை-பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், மயிலணி வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆரூர் - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் சிறீதரனின் அன்பு மனைவியும் அருண்குமார், துஸ்யந்தி, சாருலதா ஆகியோரின் பாசமிகு தாயும் நற்குணராஜா, செல்வராஜா (பிரான்ஸ்), ஆனந்தராஜா (யாழ்.பல்கலைக்கழகம்), தர்மராஜா (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறிநந்தகுமார் (பிரான்ஸ்), சிறிபாஸ்கரன் (லண்டன்), அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு மச்சாளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸ் நாட்டில் இன்று (22.02.2006) புதன்கிழமை பிரான்ஸ் நேரப்படி பி.ப.3 மணியளவில் நடைபெறும். அத்தோடு அன்னாரது அஞ்சலிப் பிரார்த்தனை நிகழ்வு ஏழாலை தெற்கு, மயிலங்காட்டில் உள்ள அவரது சகோதரரான நற்குணராஜாவின் இல்லத்தில் இன்று புதன்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

(47085)(32-15-19)

தகவல்:
சகோதரர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி துளசிகா நாகேந்திரன்

தோற்றம்: 30.04.1993
மறைவு: 04.03.2005

திதி:நவமி

கல்வியில் வித்தகியாய் கல்லூரியில் திகழ்ந்தாய்
கணப்பொழுதில் எம்மை விட்டு எங்கு நீ சென்றாய்?
பட்டம் பல பெறுவாய் என பல கனவு கண்டோம்
பாவி எம்மை பதைக்கவிட்டு பரமன் அடி சென்றாயோ?

14, B.S. லேன்,
மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நாகேந்திரன் ([illegible])

(47084)


## COMPUTER EXPRESS

Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

கம்யூட்டர் எக்ஸ்பிரசின் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

### Diploma in Video Mixing

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

*Course Contents*

- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

நன்மைகள்:-

- பாடநெறியின் இறுதியில் Video Editing தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- 27/02/2006 :- 08.30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்டிலிப்பாயில் முதியோர் சங்கம்

யாழ்ப்பாணம்,பெப்.22

சண்டிலிப்பாய் மத்தியில் முதியோர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி சண்டிலிப்பாய் மத்தி கிராம அலுவலர் பு.நிருபனின் அனுசரணையுடன் சமூகசேவை உத்தியோகத்தர் வே.அருந்தவராசாவின் ஏற்பாட்டில் இந்த சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சங்கத்தின் தலைவராக க.தம்பாபிள்ளையும் செயலாளராக நா.குகதாஸும் பொருளாளராக வா.கிருஷ்ணனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் 6 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் மத்தியில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்டோர் விரும்பினால் இச்சங்கத்தில் இணைந்து கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-202)

## தீவக வலயத்தில் பெருவிளையாட்டு போட்டிகள்

புங்குடுதீவு,பெப்.22

தீவக வலயம் மற்றும் கோட்ட மட்டத்திலான பெருவிளையாட்டுக்களும் மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகளும் எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளன.

கோட்டமட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளிலும் வலயமட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் அடுத்த மாதம் 4ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

கோட்ட மட்ட வலைப்பந்து, கரபந்துப் போட்டிகள் அடுத்தமாதம் 11ஆம், 12 ஆம் திகதிகளிலும் வலய மட்ட வலைப்பந்து, கரபந்துப் போட்டிகள் அடுத்த மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளிலும் இடம்பெறும்.

வலய மட்ட பட்மின்ரன், சதுரங்கப் போட்டிகளை அடுத்த மாதம் 25ஆம், 26 ஆம் திகதிகளில் நடத்த ஏற்பாடாகி உள்ளது. (ஐ-188-202)

## அபிவிருத்திக் குழு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.22

அரியாலை, கொழும்புத்துறை, பாசையூர் பகுதி மக்களுக்கான வலய அபிவிருத்திக் குழு கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை காலை 9 மணிக்கு அரியாலை கலைமகள் வீதி மகப்பேற்று நிலையத்திலும் பிற்பகல் ஒரு மணிக்கு கொழும்புத்துறை சுவாமியார் வீதி மகப்பேற்று நிலையத்திலும் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

சுகாதாரப் பாதுகாவலர், சுகாதார மேற்பார்வையாளர்கள், வேலை மேற்பார்வையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளுமாறு பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் து.மகாதேவன் கேட்டுள்ளார். (ஐ-203)

# ஜெனீவா பேச்சு வெற்றிபெற அனைவரும் பிரார்த்தியுங்கள்!

## யாழ்-ஆயர் வேண்டுகோள்



யாழ்ப்பாணம்,பெப்.22

ஜெனீவா சமாதானப் பேச்சுகள் வெற்றி பெற அனைத்து தமிழ்மக்களும் பிரார்த்தனைகளில் ஈடுபடவேண்டும்.

யாழ்.மறைமாவட்ட ஆயர் அதி.வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இது தொடர்பாக யாழ்.ஆயர் இல்லம் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நீண்டகால இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணும் முகமாக மீண்டும் ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவது ஒரு மகிழ்ச்சியான விடயம்.

கடந்த நான்கு வருடங்களாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்தும் போரினாலும் ஆழிப்பேரலை இயற்கை அனர்த்த பேரழிவினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு விமோசனமும் கிடைக்கவில்லை. நீண்ட நம்பிக்கையோடு - எதிர்பார்ப்போடு - இருந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பல தீர்க்கப்படவில்லை. இயல்பு வாழ்வு ஏற்படுத்தப்படவில்லை. இதனால், துன்பமும் பலத்த ஏமாற்றமும் அடைந்த மக்கள் மனமுடைந்து நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத் தீர்வினை அடைய ஆசித்து நிற்கும் இவ்வேளையில், அரச பிரதிநிதிகளும் விடுதலைப் புலிப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளனர்.

இவ்வேளையில் பேச்சுவார்த்தை எவ்வாறு முடியும், மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமா? என்ற ஐயப்பாடு மக்கள் மனதுகளில் தோன்றியுள்ளது. 'ஆண்டவரே நகரைக் காக்கவில்லை எனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும். அவனின்றி அணுவும் அசையாது' என்ற வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டுள்ள நாம், சமாதானப் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெற செப, தியான வழிபாடுகளை யாழ். மறை மாவட்டம் முழுவதிலும் ஒழுங்கு செய்துள்ளோம்.

கத்தோலிக்க மக்கள் மட்டுமல்லாது தமிழ் மக்கள் எல்லோரும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற செப, தியான வழிபாடுகளில் இத்தினங்களில் விசேட விதமாக ஈடுபட வேண்டும் எனப் பகிரங்கமாக அன்பு அழைப்பு விடுக்கின்றோம்.

மீண்டும் ஒரு தடவை போரை தமிழ் மக்களால் நினைத்துப் பார்க்கவும் முடியாது என்கின்ற வகையில் பேச்சுவார்த்தைகள் முழு வெற்றியடைய இறைவன் அருள் பாலிப்பாராக - என்று ஆயர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சகல விவசாயப் பிரதேசங்களிலும் மாதிரிப் பண்ணையாளர் சங்கங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.22

விவசாயத்திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் ஒவ்வொரு விவசாயப் பிரதேசங்களிலும் பிரதேச ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையாளர் சங்கம் அமைக்கப்படவுள்ளது.

இத்தகவலை யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எம்.ஜெகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயம் தொடர்பான உயர் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகளை விவசாயத் திணைக்களத்தின் யாழ்.அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக 12 பிரதேச ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையாளர் சங்கங்கள் பிரதேசங்கள் தோறும் அமைக்கப்படவுள்ளன.

இச் சங்கங்களூடாக விவசாயிகளின் உயர் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமான திட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ஐ-14-12-202)

## 'அறவழிச் சங்கமம்' நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.22

அறவழிப் போராட்டக் குழுவின் 27 ஆவது ஆண்டு சேவை நிறைவை முன்னிட்டு இடம்பெறும் 'அறவழி சங்கமம்' நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவற்குழி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குழுத்தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கருத்துரைகளை இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் யாழ். மாவட்ட முகாமையாளர் திருமதி ஞானச்செல்வி சிங்கேஸ்வரன், சர்வதேச பயிற்சி மன்றத்தின் மாவட்ட இணைப்பாளர் க.தவரூபன், கொமன்வெல்த் கல்வி நிதியத்தின் மாகாண இணைப்பாளர் வி.ஸ்ரீசக்திவேல், அறவழிப் போராட்டக் குழு இயக்குநர் வி.ஜீ.தங்கவேல், நாவற்குழி மகாவித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர்.

தொடர்ந்து சர்வதேச பயிற்சி மன்றத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் நாவற்குழி கிழக்கு, நுணாவில் மேற்கு சிறுவர் கழகங்களின் உறுப்பினர்கள் வழங்கும் கலை மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்வுகள் இடம்பெறும். (ஐ-202)

# கச்சதீவு வருடாந்த உற்சவம் மார்ச் 12ஆம் திகதி நடக்கும்

நல்லூர்,பெப்.22

கச்சதீவு வருடாந்த உற்சவம் இரண்டாவது தவக்காலத்தின் ஞாயிற்றுக்கிழமையான எதிர்வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதி நடைபெறும். அதற்கு முதல்நாள் சனிக்கிழமை முதல் இரண்டு தினங்கள் இடம்பெறும் கச்சதீவு வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு அங்கு அரச கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு நெடுந்தீவு உதவி அரச அதிபர் எம்.பற்றிக் டிறஞ்சன் தலைமையிலான குழு வெள்ளிக்கிழமை அங்கு செல்லவுள்ளது.

யாத்திரிகர்கள் மார்ச் 11ஆம் திகதி தமது யாத்திரையை மேற்கொள்ளமுடியும். யாத்திரிகர்கள் தமக்குத் தேவையான குடிதண்ணீர் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக ஒருவருக்கு 10 கலன் குடிதண்ணீர்வரை எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இம்முறை நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கம் மட்டுமே அங்கு விற்பனை நிலையத்தை அமைக்கவுள்ளது. (ஐ-111)




## பாவனையாளர் ஒருங்கிணைப்புக்குழு

யாழ்ப்பாணம்,பெப்.22

வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் பாவனையாளர் ஒருங்கிணைப்புச் சபை உருவாக்கப்பட்டுள்ளது.

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலர் எஸ்.திவாகரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வலிகாமம் தெற்கு பாவனையாளர் ஒருங்கமைப்புக் கூட்டத்திலேயே இந்தச் சபை தெரிவுசெய்யப்பட்டது.

சபையின் தலைவராக ஓய்வுபெற்ற அதிபர் சு.தம்பித்துரையும் செயலாளராக உடுவில் பிரதேச விவசாயிகள் சம்மேளனங்களின் சமாசத் தலைவர் சி.திருக்குமாரும் பொருளாளராக வே.ஜெனகனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்களாக 12 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வலி.தெற்கு பாவனையாளர் ஒழுங்கமைப்பு என்ற பெயரில் இச்சபை இயங்கவுள்ளது. (எ-202)

## அரங்கத் திறப்புவிழா

வலி.கிழக்கு,பெப்.22

நல்லூர் ஞானோதய வித்தியாலயத்தின் அரங்கத் திறப்புவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் சு.இராசலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் சிறுவர் பாதுகாப்பு நிறுவன திட்ட அலுவலர்களான உமா சங்கரலிங்கம், கிருஸ்ணா சின்னத்தம்பி ஆகியோரும் சிறப்பு விருந்தினராக கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கமும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (த-180)

# கடந்த வருடத்தைப் போன்று இம்முறையும் 4 மட்டங்களில் கலை, இலக்கியப் பெருவிழா

## கலாசார அமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் அனுசரணையுடன் இம்முறையும் தேசிய கலை, இலக்கியப் பெருவிழா மற்றும் கலை, இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பிரதேச செயலாளர் பிரிவு, மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் என நான்கு நிலைகளில் தேசிய கலை இலக்கியப் பெருவிழாவும் கலைஇலக்கியப் போட்டிகளும் நடத்தப்படல் வேண்டும் என கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான விரிவான சுற்றறிக்கை நாட்டில் உள்ள சகல பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள், மாகாணக் கல்வி கலாசார அமைச்சுகள் என்பவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச மட்டத்திலான கலை, இலக்கியப் போட்டிகள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடத்தப்பட்டு அவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோரின் விவரங்கள் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

மாவட்ட மட்ட கலை, இலக்கியப் போட்டிகளுக்காக சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் மாவட்டச் செயலாளரினால் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோரின் விவரங்கள் எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கலாசார செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மாகாண கலாசாரச் செயலாளர் தேசிய மட்டப் போட்டிகளுக்காக மாகாண மட்டப் பெறுபேறுகளைக் கலாசார அமைச்சுக்கு அனுப்பிவைப்பார்.

கட்டுரை, கவிதை, சிறுகதை, சிறுகதை விமர்சனம், கவிதை விமர்சனம், எழுந்தமான கவிதைப் போட்டி ஆகிய ஆறு வகையான போட்டிகளே இவ்வருடம் நடத்தப்படவுள்ளன. இவை மட்டுப்படுத்தப்பட்ட திறந்த போட்டிகளாக நடத்தப்படும்.

கலை, இலக்கியப் போட்டிகள் நிறைவு பெற்றதும் பிரதேச மட்டக் கலை, இலக்கியப் பெருவிழா எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 31ஆம் திகதி வரைக்கும் -

மாவட்ட மட்ட கலை, இலக்கியப் பெருவிழா ஓகஸ்ட் [illegible] கம் 15ஆம் திகதிக்கு இடையிலும் -

மாகாண மட்ட கலை, இலக்கியப் பெருவிழா ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதிக்கு இடையிலும் - தேசிய மட்ட இலக்கியப் பெருவிழா செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதிக்கும் 10ஆம் திகதிக்கும் இடையிலும் -

நடத்தப்படல் வேண்டும் என கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலை, இலக்கியப் பெருவிழாவை நடத்துவதற்கென சகல பிரதேச செயலகங்களுக்கும் தலா 7 ஆயிரத்து 500 ரூபாவும் மாவட்டச் செயலகங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாவும் கலாசார அமைச்சினால் அனுப்பிவைக்கப்படும்.

இதேவேளை - கடந்த வருடமும் கலாசார அமைச்சின் நிதியுதவியுடனும் பிரதேச மட்ட நிறுவனங்களின் நிதியுதவியுடனும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பல பிரதேச செயலகங்கள் இத்தகைய விழாவை ஒழுங்கு செய்து நடத்தியமையும் பின்னர், யாழ். மாவட்ட செயலகத்தினால் மாவட்ட மட்டப் [illegible] நடத்தப்பட்டமையும் தெரிந்[illegible] (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவலிங்க யோக கேந்திரா நிலையம் நடாத்தும்
## சுகவாழ்வுக்கான யோகாசன தியான வகுப்புகள்
## ஆரம்பம் - 04.03.2006

மனிதனின் உடல், உள ஆத்மீக முன்னேற்றத்திற்கான பயிற்சி வழங்கப்படவிருக்கிறது. இப் பயிற்சி நெறியில் நோயாளர்களிற்கும் மாணவர்களுக்கும் விசேட பயிற்சிகளும் வழங்கப்படும்.

ஆண்கள், பெண்கள் என இருபாலருக்கும் நடாத்தப்படும் இப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் உங்கள் பதிவுகளை 01. 03. 2006இற்கு முன் மேற்கொள்ளவும்.

இவ் யோகாசனப் பயிற்சி நெறியை யோக கேந்திர பல்கலைக்கழகம் (பெங்களூர், இந்தியா) இல பயிற்சி பெற்ற V.N. சிவனேஷ்வரராஜாவினால் விஷேடமாக பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களால் போதிக்கப்படும். இப் பயிற்சி நெறியை யாழ். பல்கலைக்கழகம் உளமருத்துவத்துறை ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பாடத்திட்டத்திற்கு அமைய கற்பிக்கப்படும்.

பயிற்சி வழங்கும் இடம் :- **அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம்.**
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
மேலதிக தொடர்பு :- **சக்தி நெற் சென்ரர்**
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் சந்தி

**குறிப்பு: இப் பயிற்சிநெறி பூரணமாகப் பூர்த்திசெய்பவர்களுக்கு சிவலிங்க யோக கேந்திர நிலையத்தால் சான்றிதழ் வழங்கப்படும்.**


## ஊர்காவற்றுறை பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

## பதவி வெற்றிடம்

பதவி:- பொதுமுகாமையாளர்
பதவி குறியீடு:- 101/3
சம்பளத்திட்டம்:- 5250 - 7750 / 120X10 - 130X10 (31/99 சுற்று நிருபப்படி)
வயது:- 18 -45 வரை
பால்:- ஆண்/பெண்

**கல்வித்தகைமை:**

அ. கூட்டுறவுப் பணியாளர் 09ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் / 10 ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்துடன் அல்லது இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உ/த) சித்தி/ க.பொ.த (உ/த) 03 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**விண்ணப்ப முடிவுதிகதி:- 10.03.2006**

**குறிப்பு:-**

01.மேற்குறிப்பிட்ட பதவிக்கு கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைவாக ரூபா 1250/=, ரூபா 2500/= சேர்த்து வழங்கப்படும்.
02.வயதெல்லையில் கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்கள் ஊடாக அனுப்புதல்வேண்டும்.
03.விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:-தலைவர்,
ஊர்காவற்றுறை ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
மண்குழி வீதி -ஊர்காவற்றுறை.
(பிரதேச சபை அருகில் ஊர்காவற்றுறை).

(ச/47978) (32-16-19)

## மரண அறிவித்தல்

### திருமதி சிறீகாந்தா தவமணி



கச்சாய் தெற்கு, பாதாள வைரவர் கோயிலடியைச் சேர்ந்த திருமதி சிறீகாந்தா தவமணி அவர்கள் 19.02.2006 ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் திரு.திருமதி விசுவலிங்கம்-சேதுப்பிள்ளை தம்பதியரின் மகளும் அமரர் முருகப்பா, திருமதி ஆச்சிமுத்துவின் மருமகளும் முருகப்பா சிறீகாந்தா (பரந்தன் இரசாயன தொழிற்சாலை) அவர்களின் அன்பு மனைவியும் சரணியா (சா/இந்துக் கல்லூரி), வினோபவன் (யா/கச்சாய் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் கண்மணி, சிவமணி, ஜெயமணி (லண்டன்), சக்திவேல் (இத்தாலி) ஆகியோரின் சகோதரியும் குலராசசிங்கம், மகேந்திரம் (பலநோக்குக் கூ.சங்கம், சாவகச்சேரி), சிவலோகநாதன் (லண்டன்), துஷ்யந்தி, புவனேஸ்வரி, கனகேஸ்வரி (நகரசபை, சாவகச்சேரி), ஜெகதீஸ்வரி, கேதீஸ்வரி (கல்வியங்காடு இ.த.க.பாடசாலை), சுதேஸ்வரி (சா/மகளிர் கல்லூரி), சிறீமோகன் (இத்தாலி), பகீரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் கிஸ்ணபிள்ளை (பரந்தன் இரசாயன தொழிற்சாலை), கணேசானந்தம், பாலசிங்கம் (விக்னேஸ்வரா அரிசி ஆலை உரிமையாளர்), சிவராசா (செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை), ஜெயபாலன் (யா/இந்துக்கல்லூரி) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2006) புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.சிறீகாந்தா
(கணவர்).

கச்சாய் தெற்கு,
கச்சாய்.

(47102)(32-16-19)

## மெய்வன்மை போட்டிகள்

பருத்தித்துறை,பெப்22

தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் ம.கணபதிப்பிள்ளை தலைமையில் கணக்கிலாவத்தை பிள்ளையார் ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கவுள்ளார். (த-118)

* * *

உடுத்துறை,பெப்.22

உடுத்துறை மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் அ.சா. அரியகுமார் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் அஞ்சலதிபர் ஐ.சின்னப்பு கலந்து சிறப்பிக்கவுள்ளார். நிகழ்வின் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை - மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பா. இரகுநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

(த-118)

## வடக்கு- கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

## கிளிநொச்சி மாவட்டம்

## தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பதவி வெற்றிடம்

கிளிநொச்சி மாவட்டத்தில் நிகொட் கருத்திட்டத்தின் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை அமைய அடிப்படையில் நியமிப்பதற்காக கீழ்க் கண்ட தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகைமைகள்
   1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி
   2. தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (NCT) அல்லது
   3. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாச் சான்றிதழ் (NDI) அல்லது
   4. கட்டட நிர்மாண தொழில்நுட்பச் சான்றிதழ் (BCT) அல்லது
   5. தொழில்நுட்ப சேவையிலுள்ள அனுபவமும் அது சம்பந்தமான தராதரப் பத்திரங்களும்
2. சேவை நிபந்தனைகள்
   1. இந்நியமனம் முற்றுமுழுதாக அமைய அடிப்படையிலானதாகும்.
   2. செயற்படுத்தப்படும் திட்டங்களின் கால எல்லைக்கு அமைவாக அமைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சேவைக்காலம் நீடிக்கப்படும். ஆயினும் பல்வேறு உபகருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதனால் தொடர்ச்சியாக பல உபகருத்திட்டங்களில் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.
   3. வேதனங்களும் ஏனைய படிகளும் அரச பொதுநிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு ஏற்புடையதாக அமையும்.
3. மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பத்தாரிகள் தங்கள் சுயவிவரங்களுடன் (Bio- data) கூடிய விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் அரசாங்க அதிபர், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2006.03.07 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிகொட் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல்வேண்டும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,
கிளிநொச்சி.

(ச/47988) (39-32-16-19)


## QUEENS HOME SCIENCE ACADEMY

**அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்**
மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்
பிரபல அழகுக்கலை நிபுணர்
**செல்வி ப.குயின்ரா** அவர்களால் மூன்று நாள் பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.
இடம் : **குயின்ஸ் அழகுக்கலை நிலையம்**
167, குருசோ றோட் (பெரிய கோயிலுக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு
தொ.பே.: 077 3301000

04.03.2006 சனி காலை 9:30
தொடக்கம் 2 மணிவரை.
01. Herbal bleach
02. Herbal Facial
03. Fruit Facial
04. Waxing
05. வீட்டில் செய்யும் Normal Facial முறை
**முழுக்கட்டணம் 1500/=**

05.03.2006 ஞாயிறு காலை 9.30
தொடக்கம் 2 மணிவரை.
01. Cream bleach
02. Gold Facial
03. Silvar Facial
04. Eye brow thrading
05. வீட்டில் சிறப் தயாரிக்கும் முறை
**முழுக்கட்டணம் 1500/=**

06.03.2006 திங்கள் காலை 9.30
தொடக்கம் 2 மணிவரை.
01. Normal Facial
02. Biotique Facial
03. Powder bleach
04. முக அழகுக்குறிப்புகள்
05. முடி உதிர்தலுக்கான oil மசாஜ்
**முழுக்கட்டணம் 1500/=**

(47099) (32-16-19)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
21.11.1977

ஆண்டவன் அணைப்பில்
22.02.2005

## அமரர் வர்ணகுலசிங்கம் சிவரூபன்

**ஆண்டு ஒன்று சென்றதடா நண்பா- ஆறவில்லை எம் துயரம்**
**உலகம் உள்ளவரை உன் நினைவு மாறாதடா!**
**அருகில் நீ இல்லையடா! ஆர் எமக்கு தோள்கொடுப்பார்!**
**தோளோடு தோள் கொடுத்த தோழா நீ! விண்ணுலகு சென்றாயோ?**
**பேரோடு புகழ் பூத்து விளங்குவாய் என நாம் காத்திருக்க- நீ எம்மை விட்டு வேரோடு சாய்ந்தாயோ?**

உன்பிரிவால் துயருறும்:
**பன்னாகம் வாழ் நண்பர்கள்.**

(ச.47986) (39.32.16.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிய பல இனங்கள் முற்றாக அழிந்துபோகும் ஆபத்து

# பறவைகளைக் கொல்வதற்குக் கண்டனம்! பண்ணை முறைகளை மாற்ற வற்புறுத்தல்!!



ஐரோப்பாவில் 'எச்-5 என்-1' வைரஸ் தொற்றுக்கு இலக்கான காட்டுத் தாரா மற்றும் அன்னப் பறவை இனங்களை இங்கு படங்களில் காண்கிறீர்கள்.

லண்டன்,பெப்.22

வான் பறவைகளால்தான் பறவைக் காய்ச்சல் நோய் பரவுகின்றது என்ற கருத்து மிகைப்படுத்தப்பட்ட சில சுயநல சக்திகளின் பிரசாரம் என்று சர்வதேச பறவைகள் வாழ்வு தொடர்பான தகவல் கொள்கை விஞ்ஞான அமைப்பின் பணிப்பாளர் டாக்டர் லியோன் பென்னன் என்ற விஞ்ஞானி கருத்து வெளியிடுகிறார்.

பி.பி.சி.யின் வாராந்த சூழல் விவகாரங்கள் தொடர்பாக 'பசுமை அறை' என்ற நிகழ்ச்சியில் டாக்டர் பென்னனின் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.


வான் பறவைகள் மூலம் பறவைக் காய்ச்சல் பரவுகின்றது என்பதை விட அழிவிலிருந்து தப்புவதற்கு முறையான நவீன பண்ணை முறைகள் அமைக்கப்படுவது அவசியம் என்று தெரிவிக்கும் அவர், பண்ணைகளில் பறவைகளைப் பிரிப்பது, பறவைகள் தங்கி முட்டையிடும் இடங்களை அழித்துவிடுவது போன்ற செயற்பாடுகள் அரிதான பறவையினங்கள் முற்றாக அழிந்துபோவதற்கு வழிவகுக்கும் என்று கூறியுள்ளார்.

பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளால் அச்சத்துக்குள்ளாகியுள்ள அரசாங்கங்கள் பறவை பண்ணை அமைப்பு முறைகளை விடுத்து வான் பறவைகளை குற்றஞ்சாட்டத் தொடங்கியிருக்கின்றன. அதனால் வான் பறவைகளுக்கு எதிரான செயற்பாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்படுகின்றது. நான் நினைக்கிறேன் இது பறவைக் காயச்சல் பரவுவதைத் தடுப்பதை விடுத்து அருமையான வான் பறவையினங்கள் அழிந்துபோவதற்கும் வழி யேற்படுத்திவிடக்கூடும் என்ற டாக்டர் லியோன் பென்னன் தெரிவித்துள்ளார்.

காட்டுப் பறவைகள்தான் ஐரோப்பா ஆசியாக் கண்டங்களில் இந்நோயைப் பரப்பியுள்ளனவென்றால் அவைகளின் இடம்மாறும் வழித்தடங்கலில் நோய் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கவேண்டும். அப்படி ஏதும் இடம்பெறவில்லை. ஆசியாவிலும் கூட பறவைகள் இடம்பெறும் பாதைகளில் உள்ள பல இடங்கள் நோய் பரவாமல் இருப்பதைக் காண்கின்றோம். அதேசமயம் அவைகளின் அயல் நாடுகளில் அடிக்கடி தொற்று ஏற்படுகின்றது. இதற்கெல்லாம் சரியான விளக்கம் காணப்படவில்லை.

ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளில் தொற்றுக் காணப்பட்டவுடனேயே கோழி இறக்குமதி மற்றும் உள்ளூரில் கோழிகளை இடம்மாற்றுவது போன்றவற்றில் கடும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியதால் மேற்கொண்டு பாதிப்புகள் ஏற்படவில்லை. மியன்மாரில் நோய் ஏற்பட்டதாகவே தகவல் இல்லை - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## 2 கோடி முட்டைகள் 50 லட்சம் கோழிகள் தேக்கம்



தமிழ்நாட்டில் நாமக்கல்லில் பறவைக் காய்ச்சல் பீதி காரணமாக 2 கோடி முட்டைகள் மற்றும் 50 லட்சம் கோழிகள் தேங்கியுள்ளன.

கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் கோழி, முட்டை ஆகியவற்றை ஏற்றிவரும் தமிழகம் உட்பட வெளிமாநில வாகனங்களுக்குத் தடை விதித்துள்ளன. இதனையடுத்து கோழி, முட்டைகள் தேங்கத் தொடங்கியுள்ளன.

கோழி மற்றும் முட்டை உற்பத்திக் கேந்திரமாக விளங்கும் நாமக்கல் மாவட்டத்தில் 10 ஆயிரம் கோழிப் பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகளில் இருந்து நாளொன்றுக்கு 2கோடி முட்டைகள் கிடைக்கின்றன. தமிழகம் மட்டுமன்றி பிற மாநிலங்களுக்கும் இங்கிருந்து இறைச்சிக்கோழிகள் மற்றும் முட்டைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. (ஐ)

# இந்தியாவில் பறவைக் காய்ச்சல் பீதி: வெளிநாட்டு நிறுவனங்களின் சதியா?

புதுடில்லி,பெப்.22

இந்தியாவில் பறவைக் காய்ச்சல் பற்றி பீதி எழுந்துள்ளதில் பன்னாட்டு நிறுவனங்களின் சதி இருக்கிறது' என்றும், அவர்களுடைய தடுப்பூசி மருந்துகளை அதிக அளவில் நாம் வாங்க வேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம் என்றும் சில வாட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது 'ரணிகட்' என்ற வியாதிதான் இந்தப் பருவத்தில் கோழிகளுக்கு வழக்கமாக இது வரும். இது கடுமையான தொற்றுவியாதி அல்ல. பறவைகள், கோழிகள் இறந்து விழுந்த இடங்களிலிருந்து பறவைக் காய்ச்சல் (ஏவியான் ப்ளூ) இருப்பதற்கான சான்று ஒன்று கூட கிடைக்கவில்லை' என்று வேங்கடேஸ்வரா குஞ்சு பொரிப்பகம் என்ற நிறுவனமும் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்.இ.சி.சி.) என்ற அமைப்பும் குற்றம் சாட்டுகின்றன.

'நம்மிடையே உலகிலேயே சிறந்த நோய் அறியும் ஆய்வு கூடங்கள் இருக்கின்றன. பறவைக் காய்ச்சல் என்று ஒரு நிருபணம் கூட கிடைக்கவில்லை' என்று என்.இ.சி.சி. தலைவர் அனுராதா தேசாய் தெரிவிக்கிறார்.

மகாராஷ்டிராவில் ஆயிரக்கணக்கில் கோழிகளைக் கொல்வது பற்றி கேட்ட போது, கோழிப்பண்ணைத் தொழிலை அழித்துவிடாதீர்கள். ஓர் ஆதாரத்தையாவது காட்டுங்கள் என்று வேண்டுகிறேன் என்றார் தேசாய்.

ஆனால் மகாராஷ்டிராத்தின் நவபூர் மாவட்ட சுகாத்ர அதிகாரி மதுகர் பவார் இது பறவைக்காய்ச்சல்தான் என்று உறுதியாகக் கூறுகிறார். 'ரணிகேட்' என்றுதான் நாங்களும் முதலில் நினைத்தோம், பறவைக் காய்ச்சல் என்பது பிற்பகலில் ஊர்ஜிதம் ஆகிவிட்டது என்றார் அவர்.

பற்வைக் காய்ச்சல் மனிதர்களைத் தாக்காமல் இருக்க, போதிய மாத்திரைகளைக் கையிருப்பில் வைத்திருக்க தாங்கள் தயாராகிவிட்டதாகவும் 10 பக்கெட்டுகளுக்கு 1000 ரூபா என்ற விலையைக்கூட 650ரூபாவாக குறைக்க தங்களுடைய நிறுவனம் தயார் என்றும் 'சிப்ளா' என்ற மருந்துக் கம்பெனியின் தலைமை நிர்வாக அதிகாரி யூசுப் ஹமீத் தெரிவித்தார். (ஐ)

# வேடந்தாங்கல் சரணாலயத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

காஞ்சிபுரம்,பெப்.22

பறவைக் காய்ச்சல் எதிரொலியாக வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் காரணமாக ஆயிரக்கணக்கான கோழிகள் இறந்துவிட்டன. மேலும் நோய் பரவாமல் இருக்க கோழிகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தமிழகத்தில் பறவைச் காய்ச்சல் நோய் பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளைக் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் வனத்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்துக்கு ஆண்டு தோறும் நவம்பர் மாதம் முதல் மே மாதம் வரை வெளிநாட்டுப் பறவைகள் தங்கி குஞ்சு பொரிப்பது வழக்கம்.

இப்பறவைகளைக் காண ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தற்போது வேடந்தாங்கலில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகள் தங்கியுள்ளன.

இந்நிலையில் வெளிநாட்டுப் பறவைகள் மூலம் பறவைக் காய்ச்சல் நோய் பரவிவிடக்கூடாது என்பதற்காகக் கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள், வனத்துறையினர் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பறவைகளின் வழக்கமான செயற்பாடுகளில் மாற்றங்கள் தென்படுகின்றனவா என கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

இதேபோல், வேடந்தாங்கல் அருகே உள்ள மற்றொரு பறவைகள் சரணாலயமான கரிக்கிலி ஏரியிலும் தங்கியுள்ள பறவைகளுக்குப் பறவைக் காய்ச்சல் பாதிப்பு உள்ளதா என அதிகாரிகள் ஆய்வுசெய்து வருகின்றனர். (ஐ)

# அணுவிசை ஒத்துழைப்பு உட்பட டில்லியுடன் பிரான்ஸ் 9 உடன்படிக்கைகள்

புதுடில்லி,பெப்.22

ஆக்கப் பணிகளுக்காக அணுசக்தியை பயன்படுத்துவது, ராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு. 9000 கோடி ரூபாக்கு 43 பயணிகள் விமானங்களை 'ஏர்பஸ் இண்டஸ்ட்ரி' நிறுவனத்திடம் இருந்து வாங்குவது ஆகியவை உட்பட பிரான்ஸுடன் இந்தியா 9 ஒப்பந்தங்களைச் செய்துகொண்டிருக்கிறது.

இந்த உடன்பாடுகள். பிரதமர் மன்மோகன் சிங். பிரெஞ் அதிபர் ஜக் ஷிராக் ஆகியோர் முன்னிலையில் டில்லியில் திங்கட்கிழமை கையெழுத்தாயின. 3 நாள் பயணமாக பிரெஞ்ச் அதிபர் ஷிராக் இந்தியா வந்துள்ளார். பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கிடையிலான உறவுகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர். அதன் இறுதியில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

விண்வெளி ஆய்வில் ஒத்துழைப்பு, வர்த்தக உறவு, கல்வி, சுற்றுலா, சுற்றுச்சூழல் கலாசாரம் ஆகியவை தொடர்பான ஒப்பந்தங்களும் திங்கட்கிழமை கையெழுத்தாயின.

ஆக்கப் பணிகளுக்காக அணுவிசையைப் பயன்படுத்துவது தொடர்பாக இரு தரப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டைச் செய்து கொள்ள இந்தியாவும் பிரான்ஸும் 2005 செப்ரெம்பரில் உடன்பாடு செய்து கொண்டன. அந்த நோக்கத்தை அடையும் வகையில் தற்போது ஆக்கப் பணிகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது தொடர்பான பிரகடனத்தில் இரு நாடுகளும் கையெழுத்திட்டன.




# ஈராக் நிலைமை குறித்து அமெரிக்கத் தூதர் விசனம்

பக்தாத்,பெப்.22

ஈராக்கில் ஓங்கிவரும் வகுப்பு வாதத்தால் ஏற்படுகின்ற ஆபத்துகள் குறித்து அப்பட்டமாகப் பேசியுள்ள ஈராக்கிற்கான அமெரிக்கத் தூதர் ஈராக்கின் அனைத்துத் தரப்பு மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யத் தவறிய அரசின் மீதும் பாதுகாப்புப் படைகள் மீதும் அமெரிக்கா தொடர்ந்தும் பணத்தை வாரி இறைத்துக்கொண்டிருக்காது என்று கூறியுள்ளார்.

இனவாத, வகுப்புவாத அடிப்படையில் சமூகம் மென்மேலும் பிளவுபட்டுக் கொண்டுபோவது நாட்டில் நடந்துவரும் எல்லா விஷயங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது என்று அமெரிக்கத் தூதர் கலில்சத் கூறினார்.

ஈராக்கில் நிஜமான ஒரு தேசிய ஒருமைப்பாடு அரசாங்கம் நிச்சயம் தேவை என்று அவர் கூறினார்.

ஈராக்கின் உள்துறை மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள், தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் ஆகியோரை தனியாகக் குறிப்பிட்டுச் சொல்லி இந்தப் பொறுப்பில் இருப்பவர்கள் இனச்சார்பற்றவராக இருக்க வேண்டும்.

ஈராக்கில் பெரும்பான்மையான மக்கள் பரவலாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவராக இருக்கவேண்டும். அதிகாரபூர்வ தனிப்படைக் குழுக்களுடன் தொடர்பு இல்லாதவராக இருக்க வேண்டும் என்று கலில்சத் குறிப்பிட்டார். (ஐ)

# சங்கானை வைத்தியசாலை பணியாளர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றுடன் முடிவு

யாழ்ப்பாணம்,பெப்.22

சங்கானை அரசினர் வைத்தியசாலையின் ஊழியர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மேற்கொண்டு வந்த பணிப் பகிஷ்கரிப்பு நேற்று நண்பகலுடன் முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வைத்திய சாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஒருவர் கடமைநேரத்தில் பொது மக்களால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வைத்தியசாலையின் ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் குதித்தனர்.

இதனால், கடந்த ஒருசில தினங்கள் வைத்திய சாலைப் பணிகள்யாவும் ஸ்தம்பிதமடைந் தன.

இதனால், நோயாளர்கள் பெரும் அசெள கரியங்களை எதிர்நோக்கிவந்தனர்.

இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு தொடர்பாக வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி எஸ்.சுபா சனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

எமது வைத்தியசாலையின் வைத்திய உத்தியோகத்தர் தாக்கப்படும் சம்பவம் நான்கா வது தடவையாக நடந்துள்ளது. இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்வது சம்பந்தப்பட்டவர்களின் கடமை யாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை களை மானிப்பாய் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், பொதுமக்களின்நலனைக்கருத்தில் கொண்டு பணிப் பகிஷ்கரிப்பை கைவிட்டு உடனடியாகப் பணிக்குத் திரும்புமாறு பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன் எம்மிடம் கேட்டுள்ளார்.

அவருடைய வேண்டுதலின் பேரில் இன்று (21.02.2006) நண்பகல் 12 மணிமுதல் எமது பணிப் பகிஷ்கரிப்பை கைவிட்டு பணிகளில் ஈடுபடவுள்ளோம் என்று அவர் தெரிவித் தார். (த-13-29)

## சிறைச்சாலை பாதுகாவலர் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,பெப்.22

சிறைச்சாலை திணைக்களத்துக்கு ஆண், பெண் பாதுகாவலர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர் வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமை யும் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இரு தினங்களிலும் காலை 9 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும். நேர்முகப் பரீட்சைக் கான அழைப்புக் கடிதங்கள் உரியவர்களுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன என்று யாழ்.மேலதிக அரச அதிபர் தெரிவித் தார்.

இதேவேளை -

சிறைச்சாலை சிற்றூழியர்களுக்கான நேர் முகத் தேர்வு பற்றி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது (ஐ)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை

## தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சிலரின் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிப்பு

அச்சுவேலி,பெப்.22

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை - 2006இற்கு விண்ணப்பித்த தனிப் பட்ட பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் சில பரீட்சைத் திணைக் களத்தால் நிராகரிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாகாண கல்வித் திணைக் களத்தில் தங்களைப் பதிவுசெய்தது தொடர்பான பதிவு இலக்கத் தைப் பரீட்சை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் குறிப்பிடாமல் விட்டதுதான் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக் கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை பற்றி மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கும் பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் தொடர் பான விவரங்கள் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. (த-11)

## தென்னிந்திய திருச்சபை அலுவலகத்துக்கு 'பக்ஸ்'

நல்லூர்,பெப்.22

நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபைக்கு லண்டனிலுள்ள நெடுந்தீவு ஒன்றிய ஐக்கிய இராச்சியம் 'பக்ஸ்' இயந்திரம்' ஒன்றை வழங்க வுள்ளது.

நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபை கேட்டுக் கொண்டதற்கிணங்கவே இந்த இயந் திரம் வழங்கப்படவுள்ளதாக ஒன்றியத் தலை வர் செ.சுரேஷ் தெரிவித்தார். (த-111-202)

## சிறுவர் பாதுகாப்பு உதவி

யாழ்ப்பாணம்,பெப்.22

சிறுவர் பாதுகாப்பு நிதியம் வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயத்திற்கு 2 கணனிகள்,றோணியோ இயந்திரம், மின் பிறப்பாக்கி ஆகியவற்றை வழங்கியுள்ள துடன் கட்டடப் புனரமைப்பிற்கான நிதியை யும் வழங்கியுள்ளது.

கட்டடத்தின் புனர்நிர்மாணத்திற்கென 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப் பட்டது. (த-202)

## பன்றிகள் தொல்லை

கோப்பாய்,பெப்.22

நீர்வேலி மேற்கு, மாசிவன் பகுதிகளில் பன்றிகள் தோட்டங்களிலுள்ள முதிர்ச்சி யடைந்த உருளைக்கிழங்கு, இராசவள்ளிக் கிழங்கு ஆகியவற்றை கிண்டி தின்று தீர்ப்ப துடன் புகையிலை தோட்டங்களிலுள்ள புகை யிலைக் கன்றுகளையும் கிண்டி எறிவதால் அப்பகுதி விவசாயிகள் பெரும் நஷ்டமடைந் துள்ளனர் என்று கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசங்களில் செய்கை பண்ணப் படாத பெருமளவு தரிசு நிலங்களில் பெரும் பற்றைகள் வளர்ந்து காடு களாக மாறியுள்ளதால் பன்றிகள் அங்கு பெருகி யிருப்பதாக கூறப்படுகி றது. (த-72)

## பொன்விழா நிகழ்வு

வலிமேற்கு,பெப்.22

சித்தன்கேணி இளைஞர் முன்னேற் றக் கழக சனசமூக நிலையத்தின் பொன் விழா மிகச்சிறப்பாக நடைபெறவுள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கை களை நிர்வாகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இம்மாதம் 20 ஆம் திகதி சித்தன் கேணி இளைஞர் முன் னேற்றக்கழக சனச மூக நிலையம் ஆரம் பிக்கப்பட்டு 50 வரு டங்கள் பூர்த்தியடைந் துள்ளன. இதனை யொட்டி அன்றைய தினம் நிலையத்தின் கொடி ஏற்றிவைக்கப் பட்டு பொன் விழா விற்கான நடவடிக் கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

பொன்விழாவை யொட்டி விளையாட் டுப்போட்டிகளையும் இலக்கியப் போட்டி களையும் மரதன், சைக்கிள் ஓட்டப் போட்டிகளையும் நடத்தி பெறுமதி யான பரிசில்களை வழங்குவதற்கு நிர் வாகத்தினர் திட்ட மிட்டுள்ளனர். (த-175)


ஈரல் நோய்களா?

நாம் பயன்மிக்க சிகிச்சை அளிக்கின்றோம்.
சிரோஸிஸ்-மஞ்சள் காமாலை
மஹோதரம்-ஹெப்படைடிட்ஸ்

இலவச ஆலோசனை :
திங்கள் - வெள்ளி காலை 9.00 - மாலை 5.00
சனிக்கிழமை காலை 9.00 - பி.ப. 2.00

FAIR PHARMA (PVT) LTD
(Manufacturers of Ayurvedic Medicines)
L5/ET/1C, World Trade Centre, Colombo 01.
Tel : 0094-11-5517897, 5551879,5558442 Fax : 0094-11-5517756
Website : www.fppvtl.org E-mail : fppvtl@lankabellnet.com
Available On Line
A BOI Approved & ISO 9001:2000 QMS Certified Company



MCS 324, Palaly Road, Jaffna. (Near "Alady " Junction)

Speed Batches

- × MS Office
- × GIT (07, 08 A/L)
- × Visual Basic, VB.Net
- × AccPack , MYOB
- × Auto CAD
- × Hardware Workshop
- × Internet & E-mail
- × CorelDraw,PageMaker,Photoshop,Typesetting
- × Cool 3D, Flash, Premiere, HTML, Photoshop

28.02.06 இற்கு முன்Microsoft கணனிப்பொறியியல் கற்கைநெறிக்கு தோற்றும் எமது நிறுவன மாணவர்களிற்கு 30% கட்டணச் சலுகையை Microsoft நிறுவனம் வழங்குகின்றது.

வெளிநாடுகளில் அதிஉயர் வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும் Microsoft, CISCO, ComTIA, Sun Micro System நிறுவனங்களின் நேரடி சான்றிதழ்கள்.

- Microsoft Certified Professional
- Microsoft Certified System Administrator
- Microsoft Certified System Engineer
- ComTIA A+ Hardware Technician
- ComTIA Network Professional
- CISCO Certified Network Admin.
- Sun Certified Java Programmer

*****Supported by UNDP/JRRP*****



பணியாளர் வெற்றிடம்

தளபாட உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை
1. ஆண் மேற்பார்வையாளர்கள் (ஓய்வு பெற்றவர் விரும்பத் தக்கது) வயது 45இற்கு மேல்
2. பெண் மேற்பார்வையாளர்கள் (ஓய்வு பெற்றவர் விரும்பத் தக்கது) வயது 40இற்கு மேல்
3. அலுவலக உதவியாளர் (ஆண்)

நேர்முகத் தேர்வு: 27-02-2006 திங்கட்கிழமை காலை 9.30

தொடர்புகளுக்கு:-
Equip Unit Trust (EUT)
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
(47118)
(54-11-45)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் ஐயன் சந்திரசேகரன்

(உதவி முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, கிளிநொச்சி, திருவள்ளுவர் ச.ச. நிலையத்தின் முன்னாள் தலைவர்)

தரணியில் நீ பிறந்து ஆற்றிய சேவைகள் சொல்லில் அடங்கா தவை. நீ மறைந்து மாதம் ஒன்று ஆனதுவே. எம் நெஞ்சை விட்டு நீங்காது உன் சேவைகள்.

**என்றும் உங்கள் நினைவோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.**

432/2, மடம் வீதி, யாழ்ப்பாணம். (47111) (54-11-45)

திருவள்ளுவர் ச.ச. நிலையமும் திருவள்ளுவர் மாதர் சங்கமும்.

## மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா இந்திராணி



சங்கானையைப் பிறப்பிடமாகவும் கரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா இந்திராணி அவர்கள் நேற்று முன்தினம் (20.02.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆண்டி-நாகு தம்பதிய ரின் பாசமிகு புதல்வியும் காலஞ்சென்ற கணபதி - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மரு மகளும் கந்தையாவின் அன்பு மனைவியும் பொன் னம்மா, சரசு, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கருண கரன் (டோகா), காந்தராணி, கமலேஸ்வரி, கலியுகவரதன், கஜேந் திரன் (இந்திரன்), அம்பிகைச்செல்வன், அகிலேஸ்வரி, ரஜனி, அம்பிகைபாலன் ஆகியோரின் அன்புத் தாயும் பாஸ்கரன் (டோகா), காலஞ்சென்ற பிரபாகரன், ரூபன், குமார் ஆகியோரின் பாசமிகு மாமியும் சர்மிளா, பாமினி, சாளினி, சஞ்சிகா, தாட்சாயினி, லக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2006) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் பொக்கனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

கரந்தனை, ஊரெழு. (47122) (54-11-45)


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6518499 முதல் 6528782 வரை. சீட்டிழுப்பு இல. 213 திகதி 20-02-2006

வெற்றி எண்கள்

1 1 7 1 8 8 சுப்பர் எண் 22

ஜக்பொட் பரிசு ரூ. 10,740,975/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 10,740,975/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/= | 500,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 92 | 5,000/= | 460,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 890 | 500/= | 445,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8967 | 50/= | 448,350/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 88829 | 10/= | 888,290/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 07 | 5,000/= | 35,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 88 | 1,000/= | 88,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 898 | 100/= | 89,800/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8879 | 20/= | 177,580/= |
| | | மொத்தம் ரூ. | 4,132,020/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,734,620/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 6527121-9-49 |
| கொழும்பு | 6527498-9-48 |
| புத்தளம் | 6524352-0-06 |
| காலி | 6526275-2-47 |
| குருணாகல் | 6524624-6-94 |
| பதுளை | 6522599-2-91 |
| அநுராதபுரம் | 6524133-6-77 |
| அம்பாந்தோட்டை | 6523647-2-33 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 10,990,175/-

தொடர் இல. 7440700 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 பெப்ரவரி 23 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறி அலுவலகத்தில் புகுந்து படையினர் மிரட்டினர்

## கஜேந்திரன் எம்.பி. கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.22

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலியில் அமைந்துள்ள தனது அலுவலகத்திற்குள் நேற்றையதினம் அத்துமீறி நுழைந்த படையினர் மிரட்டிவிட்டுச் சென்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எனது அலுவலகத்திற்குள் இன்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 2.30 மணியளவில் படையினர் அனுமதியின்றி நுழைய முயன்றனர். பொலீஸார் இல்லாமல் உள்நுழைய முடியாதென நான் தெரிவித்ததால் ஆத்திரமடைந்த படையினர் கடுமையான தொனியில் இது எல்.ரி.ரியின் அலுவலகம் தானே எனக் கூறிக்கொண்டு நுழைய முயன்றனர்.

அவர்கள் உள்நுழைவதை நான் தடுத்ததால் கடுமையான தொனியில் மாலையில் சந்திப்போம் என்று மிரட்டிவிட்டுச் சென்றனர்.

அலுவலகத்திற்கு வந்த படையினர் ஒருவரின் இலக்கம் 20A - coy என்று அவரது தோள் பையில் குறிப்பிட்டிருந்தது.

படையினரின் இத்தகைய அத்துமீறிய செயலால் அலுவலகத்தில் பதற்றநிலை தோன்றியுள்ளது. கடந்த இரவும் அலுவலகத்தினுள் படையினர் நடமாடிய தடயங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறு மிரட்டுவதனூடாக எனது அலுவலகச் செயற்பாட்டை முடக்குவதற்குப் படையினர் முயல்கின்றனர்.

படையினர் அலுவலகத்திற்கு வந்த போது அலுவலகத்தில் நின்ற பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் சிலரும் மாணவர்களும் அச்சம் காரணமாகத் தமது பிரச்சினைகளை என்னிடம் தெரியப்படுத்தாமலேயே சென்றுவிட்டனர்.

சமாதானப் பேச்சுகள் நடைபெறவுள்ள வேளையில் படையினரின் கெடுபிடிகள் நிறுத்தப்படவில்லை. படையினரின் அத்துமீறல் தொடர்பாக உரிய விசாரணைகளை நடத்துமாறு வேண்டுகின்றேன் - என்றுள்ளது. (க-3)

வேட்புமனு நிராகரிக்கப்பட்டதை எதிர்க்கும் அதேசமயம்

# கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலை பிற்போடக்கோரி ஐ.தே.க. மனு தாக்கல்

கொழும்பு, பெப்.22

கொழும்பு மாநகர சபைக்கான தமது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஐக்கிய தேசியக் கட்சி நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 'றிட்' மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கிறது. இந்த வழக்கு முடியும் வரை கொழும்பு மாநகரசபைத் தேர்தலைப் பிற்போடும் தடை உத்தரவொன்றைத் தேர்தல்கள் ஆணையாளருக்கு பிறப்பிக்குமாறும் அது நீதிமன்றிடம் கேட்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் என்.வி. கே.கே. வேரகொட தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கொழும்பு மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி மஹிந்த தேசப்பிரிய ஆகியோர் உட்பட 20 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஐ.தே.கட்சியினர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாநகர வேட்பாளராக நியமிக்கப்பட்ட நிக்வெல்ல, முத்துக்குமார, பல்லவின்னகே சுபுல் லக்மால் என்பவர் தொடர்பான பிரச்சினை ஒன்றைக் குறிப்பிட்டு கொழும்பு மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் மஹிந்த தேசப்பிரிய எமது கட்சியின் வேட்பு மனுவை நிராகரித்துவிட்டார்.

கட்சியின் சட்டத்தரணிகள் இதில் தலையிட்டு விளக்கம் கூற முற்பட்டபோது அதனை மேற்படி தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, வேட்பு மனுவை நிராகரித்த அவரின் முடிவைத் தள்ளுபடி செய்து வேட்புமனுவை மீண்டும் ஏற்றுக் கொள்ளும் உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும்.

அத்துடன் இந்த வழக்கு முடியும் வரை கொழும்பு மாநகரசபைத் தேர்தலை பிற்போடும் தடையுத்தரவையும் மன்று பிறப்பிக்க வேண்டும்.

-இவ்வாறு அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொழும்பில் இன்று விசேட வழிபாடுகள்

இன்று ஆரம்பமாகும் ஜெனீவா பேச்சு வெற்றிபெற இறைஆசி வேண்டி விசேட திருப்பலிப் பூசை - சமய வழிபாடுகள் என்பன கரிட்டாஸ் இலங்கை - செடெக் நிறுவனத்தில் முற்பகல் 10 மணி முதல் 11. 30 மணிவரை இடம்பெறவுள்ளன.

பொரளை - கிங்ஸ் வீதியிலுள்ள, நிறுவனத்தின் தேவாலயத்தில் இடம் பெறும் சமய நிகழ்வுகளை காலி மறைமாவட்ட ஆயர் வண. கலாநிதி ஜெரல்ட் அந்தனி பெரேரா, செடெக் நிறுவனத்தின் தேசிய இயக்குநர் வண. பிதா - டேடியன் பெர்னாண்டோ உள்ளிட்ட கத்தோலிக்க மதகுருமார்கள் நடத்துவர்.

# ரெலோவின் யாழ். அலுவலகம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.22

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) யாழ். மாவட்டத் தலைமைச் செயலகம் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் மூடப்பட்டு அரசியல் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் கடந்த 7 வருடங்களாக இல. 675, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிவந்தது. இது தற்போது மூடப்பட்டுள்ளது.

புதிய செயலகம் விரைவில் வேறொரு இடத்தில் திறக்கப்படும் என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளர் ந.கனகரத்தினம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(3-204)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 08 - 12 - 1968



மறைவு 09 - 01 - 2006

**அமரர் பஞ்சாட்சரம் ஸ்ரீபாலன்**

(யாழ். மாநகரசபை ஊழியர்)

எமது குடும்ப விளக்கான அமரர் பஞ்சாட்சரம் ஸ்ரீபாலன் அவர்களின் 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியைகளும் இன்று (22.02.2006) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

32/4, விதானையார் வீதி, சுண்டுக்குளி. (47124)(30-45-49-18)

உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் அன்னம்மா

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஆறுமுகம் அன்னம்மா அவர்கள் நேற்று (21.02.2006)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் ( ஆறுமுகம் தேநீர்ச் சாலை, சாவகச்சேரி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் மற்றும் சாரதாதேவி, சரஸ்வதி, திலகவதி, சிவலோகநாதன் (லண்டன்), சிவயோகவதி, சோமகலாவல்லி( பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் பரநிருபசிங்கம் (நீர்ப்பாசனத் திணைக்களம்), சோமசுந்தரம், திருவாவினன்குடியார்(சுவிஸ்), கமலாதேவி(லண்டன்), நித்தியானந்தன்(சித்திவிநாயகர் களஞ்சியம்),கனகசுந்தரம்(பிரான்ஸ்),வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

*143 , சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

கா.நித்தியானந்தன் (மருமகன்) சித்திவிநாயகர் களஞ்சியம், யாழ்ப்பாணம்.

(47128)(18-45-49)

**தேவை**

கணக்காளர் பெண் தேவை

தொடர்பு

**வீனஸ் பாம்**

திருநெல்வேலிச் சந்தி

(நல்லூர் பிரதேச செயலகம் முன்பாக)

தொ.பே.: 021 4590484

## கண்ணீர் அஞ்சலி

எனது அன்பு மாணவன்

காலஞ்சென்ற

**M.M.இன்பரூபன்**

அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காகவும் அவரது பிரிவால் வருத்தமுறும் அவரது தாய் மற்றும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காகவும் இறைவனை வேண்டுகிறேன்.

நீ.மரியசேவியர் அடிகள்.

(47117) (18-45-49)

## அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை

கொழும்பை தலைமையகமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் கிளை நிறுவனமாக இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் உத்தியோகத்தர்கள் தேவை.

1.கணனி தட்டெழுத்து தமிழ், ஆங்கிலம் நன்கு தெரிந்த பெண்கள்.

2.கணக்காளர்கள் ஆண், பெண் இருபாலரும்-

3.வரவேற்பாளர்கள் (Receptioniest), தொலைபேசி இயக்குநர், பெண்கள் தேவை.

உங்கள் விண்ணப்பப்படிவங்களை 26.02.2006 அன்று சுயவிவரக்கோவையுடன் அனுப்பி வைக்கவும். தொலைபேசி இலக்கத்தையும் தவறாது குறித்து வைக்கவும்.

**தொடர்புகளுக்கு:**

**விளம்பர இல.2812**

**மே/பா உதயன்.**

(சி-47003) (18-45-49)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

அக்ஷன் கிங் அர்ஜுன், கஜாலா, விவேக் நடித்த

**மதராஸி**

புதியநேரம்: 10.00, 1.00, 4.00

**நாகம்ஸ்** சுன்னாகம்

விஜய், திரிஷா நடித்த

**ஆதி**

காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00.7.00

**ராஜா** யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த

**சரவணா**

நேரம்: பு.நே. 10.30, 2.15மட்டும்

24 முதல் சத்தியராஜ், சிபிராஜ், நமிதா,

**கோவை பிரதர்ஸ்**

பு.நே. 10.30, 1.30,4.30

## மரண அறிவித்தல்கள்

### அழகரத்தினம் இராமநாதன்



கொக்குவில் கிழக்கைப்(பொற்பதி வீதி) பிறப்பிடமாகவும் குப்பிளானை வசிப்பிடமாகவும் கொண்ட அழகரத்தினம் இராமநாதன் அவர்கள் கடந்த 19.02.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திராதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சண்முகநாதன், அனுசியாதேவி, சிதம்பரநாதன், விவேகானந்தன், சாரதாதேவி, சிவானந்தன், நித்தியானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரகாந்தன், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.02.2006) புதன்கிழமைஅவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11 மணிக்கு குப்பிளான் காராகடந்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தையிலங்கடவை, குப்பிளான் தெற்கு.* (47126) (18-45-49)

தகவல்: சந்திரகாந்தன் (மைத்துனர்).

### திருமதி தங்கலிங்கம் பொன்னம்மா

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் திருமதி தங்கலிங்கம் பொன்னம்மா அவர்கள் நேற்று(21.02.2006)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(22.02.2006)புதன்கிழமை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-48002) (18-45-49)

தகவல்: சி.தங்கலிங்கம் தொ.பே.: 2636893

### திருமதி நடனசபாபதி கண்மணி



சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் அம்பாள்குளம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடனசபாபதி கண்மணி அவர்கள் 20.02.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா - மீனாட்சி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான இலங்கைநாதர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடனசபாபதியின் அன்பு மனைவியும் ஜெயராணி,கோகிலராணி(ஜேர்மனி), நித்தியராசா (ஜேர்மனி), அருந்தவராசா(ஜேர்மனி), உதயராசா (சுவிஸ்), விக்கினராசா ஆகியோரின் அருமைத் தாயும் மனோகரன்,தட்சணாமூர்த்தி (ஜேர்மனி), பாலராஜேஸ்வரி (ஜேர்மனி), சகுந்தலாதேவி (ஜேர்மனி), யோகரஞ்சினி (சுவிஸ்), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான திலகவதி, பார்வதி மற்றும் சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நகேந்திரம் , சுப்பிரமணியம் வே.க.ஏரம்பு, தானியலட்சுமி, விஜயலட்சுமி மற்றும் அன்னபூரணம், ஜெயபாக்கியலட்சுமி, குமாரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற சிவபாதத்தின் சிறிய தாயும் ஈழராணி, சுவாணியா, கோடீஸ்வரன், ஜானுகா, கோபிகா, ஜெனார்த்தன், வேணுசன், வேணுகா, தர்சிகா, தனுஜா, தனுசன், தர்சனா, மதுஷியா, விதுசின், புகழ்பிரியன், கஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(23.02.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் அம்பாள்குளம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-48004)(18-45-49)

தகவல்: பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் கடத்தப்பட்ட வான் மன்னார் பகுதியில் மீட்பு

கொழும்பு,பெப்.22

கொழும்பு குணசிங்கபுர பகுதியிலிருந்து மன்னார் சிலாபத்துறைப் பகுதிக்கு கடத்திச்செல்லப்பட்ட வான் ஒன்றை மன்னார் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என மன்னார் பொலீஸ்நிலைய இன்ஸ்பெக்டர் எவ்.சி. குடஷெட்டி தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை குணசிங்கபுரவில் உள்ள தனியார் வான் தரிப்பிடத்தில் இருந்து இளம் ஜோடி ஒன்று இந்த வானை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு மன்னாருக்கு பயணித்துள்ளனர். பயணத்தின் இடைநடுவில் ஆயுதம்தாங்கிய இருவர் வானில் ஏறியதுடன், வான் சாரதியை அச்சுறுத்தி அவரை இடைநடுவில் இறக்கிவிட்டு வானைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இறக்கிவிடப்பட்ட வான் சாரதி வவுனியா பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து மன்னார் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

மன்னார் பொலீஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது வான் கைப்பற்றப்பட்டது எனவும், வானைக் கடத்திச் சென்ற நால்வரும் தலைமறைவாகி விட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## தொண்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர, ஆறுமுகன் தொண்டமானின் பாதுகாப்பிற்காக மேலதிக வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளனவென அலரி மாளிகை வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதேபோன்ற தீவிர பாதுகாப்பு முன்னரும் ஆறுமுகன் தொண்டமானுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் ஜனாதிபதித் தேர்தலில், ஐ.தே.க. வேட்பாளர் ரணிலுக்கு இ.தொ.கா. ஆதரவளித்ததைத் தொடர்ந்து அந்தப் பாதுகாப்புகள் குறைக்கப்பட்டன; அநேகமாக முற்றாக விலக்கப்பட்டன. (ற -05)

## அரசு - புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அடேல் பாலசிங்கம் ஆகியோர் பங்கேற்றனர். அரச குழுவில் அதன் தலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பங்கேற்கவில்லை. அமைச்சர்களான பேரியல் அஷ்ரப், ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே, ரோஹித போகொல்லாகம, எச்.எல்.டி.சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக்கொண்டு சாதாரணமாக அளவளாவினர். அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளேயை புலிகளின் ஏனைய உறுப்பினர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்த மதியுரைஞர் பாலசிங்கம், ''இவர் பூர்வீகத்தைத் தமிழாகக் கொண்டவர்; தமிழர்'' என்று கூறினார். இதனை அடுத்து தமிழ்ச் செல்வன் உட்பட ஏனையவர்களுடன் தமிழிலேயே உரையாடினார் அமைச்சர். (க-3)

## களத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்போம்.'' இவ்வாறு பதிலளித்தார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

இந்த சுவாரசியமான உரையாடல் நேற்றுப் பிற்பகல் அளவில் ஜெனீவாவில் பொஸே ஹோட்டலில் இடம்பெற்றது.

நண்பகல் அளவில் விடுதலைப் புலிகளின் பேச்சுக்குழுவுடன் சந்தித்துப் பேசி அறிமுகமாகிக்கொண்ட அரச சமாதானக் குழுவினர் மத்தியில் இடம் பெற்றிராத அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, தமது அறைகளுக்கு வெளியே கூடிப்பேசிக்கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் பிரமுகர்களைப் பின்னர் சிநேக பூர்வமாக நேரில் சந்தித்துப் பேசினார். அப்போதே மேற்கண்ட சுவாரசியமான உரையாடல் இடம் பெற்றது. (க-3)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுடனும் கலந்துரையாடப்பட்டதன்பின் நோர்டிக் நாடுகளின் ஆலோசனைப்படி இவர் நியமிக்கப்பட்டுள்ளார் என நோர்வே வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இடம்பெற்றுள்ள மற்றொரு நாடு முக்கியமான பொறுப்புக்கு ஒருவரை முன்நிறுத்தியமை மிகவும் சாதகமான நிலை'' என்று நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் கருத்துத் தெரிவித்துள்ளார். நோர்வே நாட்டின் ஹக்ரப் ஹொக்லண்ட் இதுவரை கண்காணிப்புக் குழுவின் தலைவராக இருந்தார். 2002ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டுவரை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பணியாளர் பொறுப்பிலும் 2005ஆம் ஆண்டுமுதல் தலைவர் பொறுப்பிலும் கடந்த நான்கு ஆண்டுகளாக ஹக்ரப் ஹொக்லண்ட் பணியாற்றினார். ஹக்ரப் ஹொக்லண்டின் சேவைகள் அளப்பரியது என்றும், எரிக் சொல்ஹெய்ம் பாராட்டுத் தெரிவித்துள்ளார் என்றும் அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - கடந்த மாதம் வன்னிக்கு வருகைதந்திருந்த சமயம் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நடத்திய பேச்சின்போது கண்காணிப்புக் குழுத் தலைவர் மாற்றம் குறித்து பிரஸ்தாபித்து, அதற்கான அனுமதியைப் பெற்றிருந்தார் என்றும் -

ஜெனீவா வந்துள்ள அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் குழுவுடன் நேற்று இது தொடர்பாகக் கலந்துரையாடிய பின்பே புதிய தலைவர் தொடர்பான விவரம் வெளியிடப்பட்டது என்றும் - தெரிவிக்கப்பட்டது. அனுசரணைப்பணி மற்றும் கண்காணிப்புப் பணி ஆகியவற்றின் தலைமைப்பதவிகளை நோர்வேயே வைத்திருக்கக்கூடாது என எழுப்பப்பட்டுவந்த கோரிக்கைகளை அடுத்தே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(3-14)

## பேச்சுக்குழுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏழுபேர் இடம்பெற்றுள்ளனர். இவர்களுக்கு வளஆளணியினராக பதினைந்துபேர் இடம் பெற்றுள்ளனர்.

இவ்வாறு பேச்சுமேசையில் இரு தரப்புகளுக்கு இடையிலும் சமத்துவமற்ற நிலை காணப்படுவது பேச்சுகளை சுமூகமாகக் கொண்டுசெல்வதற்கு இடையூறாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தச் சமத்துவமற்ற நிலை குறித்து நேற்று தம்மைச் சந்தித்துப் பேசிய நோர்வே அனுசரணையாளர்களான முன்னாள் பிரதி அமைச்சர் விடார் ஹெல்கிஸன் தலைமையிலான குழுவினரிடம் பாலசிங்கம் சுட்டிக்காட்டினார். புலிகளின் பேச்சுக் குழுவுக்கு சமமான வகையில் அரச குழுவினரின் எண்ணிக்கை மட்டுப்பாட்டுக்குள் இருக்கவேண்டியதன் அவசியம் பற்றியும் அவர் எடுத்து விளக்கினார்.

அதேசமயத்தில், இன்று ஆரம்பிக்கும் இரு நாள் பேச்சுகளில் போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையில் செம்மையான நடைமுறைப்படுத்தல் பற்றி மட்டுமே தாங்கள் பேசப்போகிறார்கள் என்ற விடயத்தை அன்ரன் பாலசிங்கம் மிகத் திட்டவட்டமாக நோர்வேக் குழுவினரிடம் தெரிவித்துள்ளார். ''யுத்த நிறுத்தத்தைச் செம்மையாக நடைமுறைப் படுத்துவது குறித்துப் பேசுவது பற்றியே நீங்கள் தலைவர் பிரபாகரனிடம் தெரிவித்திருந்தீர்கள். எனவே, நாங்கள் அந்த விடயத்தைப் பற்றி மட்டுமே பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம்.'' - இவ்வாறு விடார் ஹெல்கிஸனிடம் தெரிவித்தார் பாலசிங்கம்.

இன்றைய பேச்சுகளுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் நோக்குடனேயே நோர்வேக் குழுவினருக்கும் புலிகளின் குழுவினருக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, நோர்வே அனுசரணைக் குழுவின் தலைவரும், அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் நேற்று சுவிஸ் நேரப்படி இரவு 7 மணிக்கு (இலங்கை நேரப்படி நள்ளிரவுக்குப் பின்னர்) பாலசிங்கம் குழுவினரைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பின் போதே பேச்சுக்கான நிகழ்ச்சிநிரல் இறுதி செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (க-3)

## மஹிந்த - பிரபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் குழு ஏற்கனவே ஜெனீவாவில் தங்கியிருக்கின்றது. அதனுடன் பாலசிங்கம் தம்பதியர் இணைந்து கொண்டுள்ளனர்.

நடைபெறவுள்ள பேச்சுக் குறித்து விமான நிலையக் கேட்போர் கூடத்தில் ஆதரவாளர்கள் மத்தியில் அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார். சுமார் 5 நிமிடங்கள் நீடித்த அந்த உரையில் அவர் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டைத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்களான, துணை இராணுவக் குழுக்களின் கலைப்பு, அதியுயர் பாதுகாப்பு வலயங்கள், மீன்பிடித் தடைகள், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் போராளிகளின் அரசியல் பணிகள் என்பன பற்றியே இன்று ஆரம்பிக்கும் பேச்சில் மிக முக்கியமாகப் பேசப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பேச்சு வெற்றி பெறுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்றும் கருத்து வெளியிட்டார் அவர்.

ஜெனீவாவில் நடைபெற இருப்பது 'மஹிந்த சிந்தனை'க்கும் 'பிரபாகரன் சிந்தனை'க்கும் இடையிலான கருத்துப் போர் எனவும் பாலசிங்கம் வர்ணித்தார். 'மஹிந்த சிந்தனை' என்ற அடிப்படையில் பயிற்சி பெற்று சிங்கள அரசியல்வாதிகள் இங்கே வருகின்றனர். நாங்களும் பிரபாகரன் சிந்தனை என்ற அடிப்படையில் போகிறோம். எந்தச் சிந்தனை எடுபடப் போகின்றது என்று பார்ப்போம்'' - என்றார் பாலசிங்கம்.

''தமிழீழத்தில் அண்மைக் காலமாக நிழல் யுத்தம் நடைபெற்றது. இப்போது அது முடிந்து கருத்து யுத்தம் ஜெனீவாவில் நடைபெறவுள்ளது. பயிற்சிப் பாசறைக்குப் போய்விட்டு சிங்கள அரசியல்வாதிகள் கூட்டம் இங்கே வந்திருக்கிறது.

''தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகத்தான் இந்தப் பேச்சுக்கள் என்று கூறப்பட்டாலும், விடுதலைப் புலிகளை மடக்க வேண்டும், பால சிங்கத்தை மடக்க வேண்டும் என்று பயிற்சிகளை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள் சிங்கள அரசியல்வாதிகள்.

''நாங்களும் இரண்டு நாள்களுக்கு அவர்களுக்கு வகுப்புக்களை நடத்திவிட்டு வருவோம். வேறு என்ன செய்வது?'' - என்று மேலும் தெரிவித்தார் பாலசிங்கம்.

துணை இராணுவக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைந்து அவற்றை நிராயுத பாணிகளாக்குதல் -

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான மக்களைத் தங்கள் சொந்த நிலங்களுக்கும் வீடுகளுக்கும் செல்ல விடாமல் தடுத்து வைத்திருக்கும் இராணுவத்தை அந்த இடங்களில் இருந்து அகற்றி, அந்த மக்களை தங்கள் சொந்தக் கிராமங்களுக்கு, நிலங்களுக்குத் திரும்பிச் செல்ல வைத்தல்-

மீன்பிடித் தடைகளினால் தமிழ் மீனவ சமுதாயம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அத் தடைகளை அகற்றி தமிழ் மக்கள் தங்களது தமிழீழக் கடலில் சுதந்திரமாக மீன் பிடிக்க வழியேற்படுத்திக் கொடுத்தல்-

இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருக்கும் தமிழரின் சொந்த மண்ணில் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் அரசியல் பணிகளை மக்களுடன் இணைந்து மேற்கொள்ள வழியேற்படுத்திக் கொடுத்தல் -

ஆகிய விடயங்களை நிறைவேற்றுவது குறித்தே இந்தப் பேச்சுக்களில் புலிகள் குழுவினர் வலியுறுத்த உள்ளனர் என்றும் பாலசிங்கம் தெரிவித்தார்.

''எங்கள் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகத்தான் பேச்சுக்களில் பங்கேற்றிருக்கிறோமே தவிர வேறு நோக்கம் எதுவும் எமக்கு இல்லை'' எனவும் பாலசிங்கம் இறுதியாகத் தெரிவித்தார். அவர் உரையாற்றும் போது அவரது பாரியார் அடேல் பாலசிங்கம் அம்மையாரும் உடன் இருந்தார். (க-3)



CHEMISTRY
SATHAPONS - ALVAI
A/L 2008 புதிய பிரிவு
Sat.& Sun 6.30 a.m.
2006, 2007 பிரத்தியேக வகுப்புகள்
POINT-PEDRO-KOKKUVIL-ALAVEDDY
தொடர்புகளுக்கு:
T.P.: 0777 - 172715
By:க.வாணிமுகுந்தன் B.Sc.

அறிமுகமாகிறது!
உள்நாடு, வெளிநாடுகளுக்கான கடிதங்கள், பொதிகள் நீங்கள் குறிப்பிடும் விலாசங்களில் துரிதகதியில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 7310

43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka. T.P: 021 2225170, 0777846811
Dip. in AutoCAD
Dip. in Internet E-Mail
தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம்
25.02.2006

Diploma in Internet & E-Mail
Speed Batch Only 10 Hours
Start on - 25-02-2006
Days :- Sat, Sun
Time :- 3.30 p.m
Only For 10 Students
Fees : 1000/=
பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள் 2006
ஆரம்பம் 25,27.02.2006
Special Offer 2000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 4 Months
DIPLOMA IN DESKTOP PUBLISHING 4 Months
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING 4 Months
DIPLOMA IN NETWORK ENGINEERING 5 Months
DIPLOMA IN WEB DESIGNING 4 Months
DIPLOMA IN COMPUTER SCIENCE 6 Months
DIPLOMA IN INTERNET E-MAIL 2 Months
Softview Computer College
Www.scclanka.com scclanka@hotmail.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170, 0777846811

EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2006 ஏப்ரல்

வெளியீடு 01

## மாதிரி வினாப்பத்திரம்

## இணைந்த கணிதம்

S.S.செந்தில் ராஜ் (B.Sc) - யாழ்ப்பாணம்.

(15.02.2006ஆம் திகதிய வினாத்தாளின் தொடர்ச்சி)

7] (a) அரைவட்ட அடரின் ஈர்வை மையத்தைத் தீர்மானிக்க. $2\ell$ பக்கம் கொண்ட சீரான சதுர அடர் PQRS இலிருந்து PQ ஐ விட்டமாக கொண்ட அரை வட்டப் பகுதி நீக்கப்படுகின்றது. மிகுதியின் ஈர்வைமையம் PQ இலிருந்து $\dfrac{20\ell}{3(8-\pi)}$ தூரத்தில் கிடக்கும் எனக் காட்டுக. மிகுதி R இலிருந்து சுயாதீனமாகத் தொங்கவிடப்படின் சமநிலையில் RS ஆனது கீழ்நோக்கிய நிலைக்குத்துடன் θ எனும் கோணத்தை அமைக்கும் எனக் காட்டுக. இங்கு $\tan\theta = \dfrac{2(14-\pi)}{3(8-\pi)}$ ஆகும்.

(b) ஆரை a யாகவுள்ள ஓர் அரைவட்டமானது தன் தளம் நிலைக்குத்தாயும் தன் விட்டம் நிலத்தின் மீது அசையாதிருக்கும் படியும் நிலைப்படுத்தப்படிருக்கிறது. அதே நிலைக்குத்துத் தளத்தில் நீளம் $\ell$ யுடைய ஒரு சீரான பாரமான கோல் அதன் ஒரு முனை நிலத்தில் கிடக்க அவ்வரைவட்டத்தைத் தொட்டுக் கொண்டிருக்கின்றது. அக்கோலுக்கும் நிலம், அரைவட்டம் என்பவற்றிடையேயுள்ள உராய்வுக் குணகம் $\tan\lambda$ எனின் எல்லைச் சமநிலையில் அக்கோலின் சாய்வு θ ஆனது $\ell \sin^2\theta = a \sin 2\lambda$ என்பதால் தரப்படுமென காட்டுக.

8] (a) S என்னும் மாதிரி. வெளியில் A என்னும் நிகழ்ச்சி இடம் பெற்ற பின் B என்னுமோர் நிகழ்ச்சி நிகழ்வதற்கான நிபந்தனை நிகழ்தகவைத் தருக.

★ ஓர் ஆய்வாளர் ஒரு பிள்ளை உயர்கல்வி கற்றல் என்பது அப்பிள்ளையின் பரம்பரையினரின் கல்வி கற்றலில் தங்கியிருக்கும் என்று கூறுகிறார்.

★ இன்னுமோர் ஆய்வாளர் அப்பிள்ளையின் உயர்கல்வி சூழலில் உள்ளவர்களின் கல்வி

கற்றலில் தங்கியிருக்கும் எனக் கூறுகிறார்.

இவர்களது ஆய்வுகளில் இருந்து.

எழுமாறாக ஒரு பிள்ளை உயர் கல்வி கற்றல் என்பதன் நிகழ்தகவு 0.4 எனவும் பிள்ளை உயர்கல்வி கற்கும் போது பரம்பரையினர் கற்றவர்களாக இருப்பதன் நிகழ்தகவு 0.8 எனவும் பிள்ளை உயர்கல்வி கற்கும் போது சூழலில் உள்ளவர்கள் கற்றவர்களாக இருப்பதன் நிகழ்தகவு 0.7 எனவும் அறியப்பட்டுள்ளது.

பின்வருவனவற்றின் நிகழ்தகவைக் காண்க.

(I) பரம்பரையினர் கல்வி கற்றவராயும் பிள்ளை உயர்கல்வி கற்பதாகவும் இருக்கும்

(II) சூழலில் உள்ளவர்கள் கல்வி கற்றவராயும் பிள்ளை உயர்கல்வி கற்பதாயும் இருக்கும்.

மேலும். ஆய்வுகளிலிருந்து பரம்பரையினர் கல்வி கற்றதற்கான நிகழ்தகவு 0.6 ஆகவும், சூழலில் உள்ளவர்கள் கல்வி கற்றதற்கான நிகழ்தகவு 0.5 ஆகவும் இருக்கும் எனவும் அறியப்படின், பரம்பரையினர் கல்வி கற்றால் பிள்ளை உயர்கல்வி கற்பதற்கோ அல்லது சூழலில் உள்ளவர்கள் கல்வி கற்றால் பிள்ளை உயர்கல்வி கற்பதற்கோ சாத்தியக்கூறு அதிகம் எனக் காண்க

(b) காதல் திருமணம் செய்த ஒரு ஆண் விவாகத்தின் பின் மகிழ்ச்சியாக இருப்பதற்கான நிகழ்தகவு 0.6 ஆகவும், காதல் திருமணம் செய்த ஓர் பெண் விவாகத்தின் பின் மகிழ்ச்சியாக இருப்பதற்கான 0.7 ஆகவும், காதல் திருமணமானவர்களை கணவர் மகிழ்ச்சியாக இருக்கிறார் எனின் மனைவியும் மகிழ்ச்சியாக இருப்பதற்காக நிகழ்தகவு 0.8 ஆகவும் உள்ளது.

(I) காதல் திருமணம் செய்த மனைவி மகிழ்ச்சியாக இருக்கும் நிகழ்தகவு காண்க

(II) காதல் திருமணம் செய்த மனைவி மகிழ்ச்சியாக இருக்கிறார் எனின் கணவனும் மகிழ்ச்சியாக இருப்பதற்கு நிகழ்தகவு யாது?

(III) காதல் திருமணமான கணவன் அல்லது மனைவி மகிழ்ச்சியாக இருக்கும் நிகழ்தகவு காண்க

(IV) இவை சாரா நிகழ்ச்சியா தம்முள் புறநீங்கும் என காரணங்களுடன் தருக.

9] (a) மாறி x ஒன்றின் இடை, மாறற்றிறனுக்குரிய வரைவிலக்கணம்

$$\overline{X} = \sum_{i=1}^{n} \frac{Xi}{n} \qquad V(x) = \sum_{i=1}^{n} \frac{(Xi - \overline{X})^2}{n}$$

என்பதால் தரப்படுகின்றது.

$$V(x) = \frac{1}{n}\left(\sum_{i=1}^{n} Xi^2\right) - \overline{X}^2$$ எனக் காட்டுக.

$n_1$, $n_2$ பருமன்கள் கொண்ட இரு தொடை பெறுமானங்களின் இடைகள் முறையே $\overline{X}, \overline{Y}$ அவற்றின் மாற்றிறன்கள் முறையே $\sigma x^2, \sigma y^2$ ஆகும். $(n_1 + n_2)$ பருமனுடைய ஒன்று சேர்ந்த பெறுமானங்களின் மாறற்றிறன் σz , இடை $\overline{Z}$ எனின் $\overline{Z} = \dfrac{n_1\overline{x} + n_2\overline{y}}{n_1 + n_2}$,

$$(n_1 + n_2)\sigma^2 = n_1.\sigma x^2 + n_2.\sigma y^2 + \frac{n_1.n_2}{n_1 + n_2}\left(\overline{x} - \overline{y}\right)^2$$ எனக் காட்டுக.

(b) வகுப்பொன்றில் 25 மாணவர்களை குழு A,B ஆக பிரிக்கப்பட்டு பரீட்சை வினாத்தாள் கொடுக்கப்பட்டு அப்பபுள்ளிகளுக்கு பின்வரும் தரவுகள் தரப்பட்டுள்ளன .

| குழு | மாணவர்எண்ணிக்கை | இடை | மாறற்றிறன் |
|---|---|---|---|
| A | 13 | 15 | 3 |
| B | 12 | 12 | 2 |

இதிலிருந்து 25 மாணவர்களினது இடை ,நியமவிலகல் காண்க.

## விடைக் குறிப்புக்கள்

## இணைந்த கணிதம் I

[1] (a) $\alpha + \beta = -\dfrac{b}{a}$ , $\alpha\beta = \dfrac{c}{a}$

$\alpha + \delta = -\dfrac{q}{p}$ , $\alpha\delta = \dfrac{r}{p}$

α,β,r,δ என்பன கூட்டல் விருத்தியில் உண்டு

$\beta - \alpha = \delta - r$

$\therefore \beta - \alpha = \delta - r$

$(\beta + \alpha)^2 - 4\beta\alpha = (\delta - r)^2 - 4\delta r$

$\dfrac{-b^2}{a} \dfrac{-4c}{a} = \dfrac{-q}{p}^2 - \dfrac{4r}{p}$

$\dfrac{b^2 - 4ac}{a^2} = \dfrac{q^2 - 4pr}{p^2}$

$\dfrac{D_1}{a^2} = \dfrac{D_2}{p^2}$

$\therefore D_1 : D_2 = a^2 : p^2$

(b) $m(ax^2 + 2bx + c) + px^2 + 2q + r = 2006(x + k)^2$

$(ma + p)x^2 + 2(bm + q)x + mc + r = 2006(x^2 + 2kx + k^2)$

$\underline{x^2}$ : $ma + p = 2006$

$\underline{x}$ : $2(bm + q) = 2 \times 2006\, k$

$bm + q = 2006\, k$

மாறிலி: $mc + r = 2006\, k^2$

(ma+p) k =2006 k =bm +q (ma+p) k =2006 k =bm +q

m(ak-b) =q-pk m(ak-b) =q-pk

$m = \dfrac{q - pk}{ak - b}$ m = q- pk

$(bm + q)k = 2006\, k^2 = r + mc$

$m(bk - c) = r - qk$

$m = \dfrac{r - qk}{bk - c}$

ak-b

$\therefore \dfrac{q - pk}{ak - b} = \dfrac{r - qk}{bk - c}$

$(ak - b)(qk - r) = (pk - q)(bk - c)$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(c) $\frac{x^2}{(x-a)(x-b)(x-c)} = \frac{A}{x-a} + \frac{B}{x-b} + \frac{C}{x-c}$

$x^2 \equiv A(x-b)(x-c) + B(x-a)(x-c) + C(x-b)(x-a)$

$\underline{x=a}: a^2 = A(a-b)(a-c) \Rightarrow A = \frac{a^2}{(a-b)(a-c)}$

$\underline{x=b}: b^2 = B(b-a)(b-c) \Rightarrow B = \frac{b^2}{(b-a)(b-c)}$

$\underline{x=c}: c^2 = C(c-a)(c-b) \Rightarrow C = \frac{c^2}{(c-a)(c-b)}$

$\frac{x^2}{(a-b)(a-c)(x-a)} \quad \frac{a^2}{(a-b)(a-c)(x-a)} + \frac{b^2}{(b-a)(b-c)(x-b)} + \frac{c^2}{(c-a)(c-b)(x-c)}$

x = 0 எனப் பிரதியட

$0 = \frac{a^2}{(a-b)(a-c)(-c)} + \frac{b^2}{(a-b)(a-c)(x-a)} + \frac{c^2}{(c-a)(c-b)(-c)}$

$\therefore \frac{a}{(a-b)(a-c)} + \frac{b}{(b-a)(b-c)} + \frac{c}{(c-a)(c-b)} = 0$

[2] (a) (i) ${}^8c_4 \, {}^6c_2 + {}^6c_4 \, {}^3c_2 = 1095$

(ii) ${}^6c_2 \, {}^6c_4 + {}^8c_2 = 435$

(iii) $14c_4 \, 9c_2 = 36036$

(b)

$1 - u = v + w > 0$
$1 - v = w + u > 0$
$1 - w = u + v > 0$

$(1-u)(1-v)(1-w) = (v+w)(w+u)(u+v)$

$\therefore (1-u)(1-v)(1-w) \geq 2\sqrt{vw} . 2\sqrt{w.u}\, 2\sqrt{uv}$
$= 8uvw$

எனவே $8uvw \leq (1-u)(1-v)(1-w)$ — ①

$(1-u)(1-v)(1-w) \leq \left(\frac{1-u+(1-v)+1-w}{3}\right)^3 \quad \therefore \left(\frac{a+b+c}{3} \geq (abc)^{1/3}\right)$

$(1-u)(1-v)(1-w) \leq \left(\frac{3-(u+v+w)}{3}\right)^3$

$(1-u)(1-v)(1-w) \leq \left(\frac{3-1}{3}\right)$

$(1-u)(1-v)(1-w) \leq \frac{8}{27}$ ______ ②

①, ② $\Rightarrow 8uvw \leq (1-u)(1-v)(1-w) \leq 8/27$

[3] (a) $0 < x < \frac{\pi}{2} \Rightarrow 0 < Sin^2 x < 1$

$Sin^2 x + Sin^4 x + Sin^6 x + ........\infty = \frac{Sin^2 x}{1 - Sin^2 x} = \tan^2 x$

$y = e^{\left[\left(Sin^2 x + Sin^4 x + Sin^6 x......\infty\right)\log_e 2\right]}$

$= e^{\left[\tan^2 x . \log_e 2\right]}$

$y = e^{\log_e 2^{\tan^2 x}} = 2^{\tan^2 x}$

ஆனால் $x^2 - 9x + 8 = 0$ இனை $y$ திருப்தி செய்யும்.

$y^2 - 9y + 8 = 0$

$(y-1)(y-8) = 0$

$y = 1 \;\; or \;\; y = 8 = 2^3$

$y = 1: \;\; 2^{\tan^2 x} = 1 = 2^0 \Rightarrow \tan^2 x = 0$ பொருந்தாது $[\because x > 0]$

$y = 8: 2^{\tan^2 x} = 2^3 \Rightarrow \tan^2 x = 3 \Rightarrow \tan x = \sqrt{3}$

$\frac{Sinx - Cosx}{Sinx + Cosx} = \frac{\tan x - 1}{\tan x + 1} = \frac{\sqrt{3}-1}{\sqrt{3}+1} = \frac{(\sqrt{3}-1)^2}{3-1} = 2 - \sqrt{3}$

(b) $R_n \equiv 2 + \sqrt{2 + \sqrt{2 + \sqrt{2 + ................ + \sqrt{2}}}} < 4$

(n-1) தடவை

n=1: $L.H.S = R_1 = 2$
$R.H.S = 4$

$\therefore L.H.S < R.H.S$

எனவே n=1 இற்கு முடிவு உண்மை ஆகும்.
P என்பது யாதாயினும் ஓர் நேர் முழு எண் என்க.
n= P இற்கு முடிவு உண்மை என்க.

$R_p \equiv 2 + \sqrt{2 + \sqrt{2 + \sqrt{2 + ................ + \sqrt{2}}}} < 4$

(P-1) தடவை

$n = P+1: L.H.S = R_{p+1}$

$= 2 + \sqrt{2 + \sqrt{2 + \sqrt{2 + ................ + \sqrt{2}}}}$

P தடவை

$= 2 + \sqrt{R_p} < 2 + \sqrt{4}$

$L.H.S < 4$

$L.H.S < R.H.S$

எனவே n= P +1 இற்கு முடிவு உண்மை
ஆனால் n=1 இற்கு முடிவு உண்மை
∴ n=2 இற்கு முடிவு உண்மை ஆகும்.
எனவே n இன் எல்லா நோ முழு எண்பெறுமானங்களுக்கும் கணிதத் தொகுத்தறிமுறை
மூலம் முடிவு உண்மை ஆகும்.

$S_n \equiv 2 - \sqrt{2 + \sqrt{2 + \sqrt{2 + ................ + \sqrt{2}}}}$

(n-1) தடவை

இங்கு கேட்கப்பட்ட வினா $\frac{S_{n+1}}{S_n}$ ஆகும்.

ஆனால் $S_{n+1} . R_{n+1} = \left(2 - \sqrt{2 + \sqrt{2 + \sqrt{2 + ................ + \sqrt{2}}}}\right)\left(2 + \sqrt{2 + \sqrt{2 + \sqrt{2 + ................ + \sqrt{2}}}}\right)$

n தடவை n தடவை

$= 4 - \left(\sqrt{2 + \sqrt{2 + \sqrt{2 + ................ + \sqrt{2}}}}\right)^2$

n தடவை

$= 4 - 2 - \left(\sqrt{2 + \sqrt{2 + \sqrt{2 + ................ + \sqrt{2}}}}\right)$

(n -1)தடவை

$= \left(2 - \sqrt{2 + \sqrt{2 + \sqrt{2 + ................ + \sqrt{2}}}}\right)$

(n -1)தடவை

$S_{n+1} . R_{n+1} = S_n$

$\frac{S_{n+1}}{S_n} = \frac{1}{R_{n+1}} > \frac{1}{4}$

எல்லா n இற்கும் $R_n < 4$ ஆகையால்

[4] (a) $Z_1 = 2 + i, \; Z_2 = -2 + 4i$

$\frac{1}{Z} = \frac{1}{Z_1} + \frac{1}{Z_2}$

$\Rightarrow Z = \frac{Z_1 . Z_2}{Z_1 + Z_2} = \frac{(2+i)(-2+4i)}{5i}$

$= \frac{8+6i}{-5i}$

$= \frac{-8i+6}{-5}$

$= \frac{6}{5} + \frac{8i}{5}$

$|Z| = \sqrt{(6/5)^2 + (8/5)^2} = 2$

$\arg(Z) = \tan^{-1}(y/x) = \tan^{-1}\frac{8/5}{6/5} = \tan^{-1}(4/3)$

(இரசாயனவியல் வினாத்தாளும் இணைந்த கணிதம் I விடைக்குறிப்புகளும் 01.03.2006 ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org